Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மலர் – 36 இதழ் – 4 ஏப்ரல் – 2023

தனிப்பிரதி
ரூ.10/-



ஜெபியுங்கள் ! 23—ஆம் பங்குபெறுங்கள் !!

# வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

"திருமறை தியானம்" தொலைக்காட்சி நேயர்கள்

& "திருமறை ஆசான்" வாசகர் கருத்தரங்கம்

இடம் :

YMCA வளாகம், ஏலகிரி மலை.

(வேலூர் மாவட்டம்)

ஈரோடு – சென்னை இரயில் மார்க்கத்தில்,
ஜோலார்பேட்டை சந்திப்பிலிருந்து சுமார் 22 கி.மீ.
திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து சுமார் 30 கி.மீ.

நாள் : மே, 8,9,10 - 2023

(திங்கள், செவ்வாய், புதன்)

பதிவுக் கட்டணம்

பெரியவர்கள் ரூ. 900 /-

சிறியவர்கள் ரூ. 600 /-

முன் பதிவுக்கு முந்துங்கள்

பதிவு செய்வது அவசியம்


## ஆசானின் அறிவுரையிலே ...


1. ஆசிரியர் உரை 3
2. வேதாகமம் பரலோகம்... 11
3. பெண்கள் பகுதி 13
4. வாலிபர் பகுதி 17
5. சிறுவர் பகுதி 21
6. அந்த நம்பிக்கை நம்மை... 22
7. நசரேநாகிய இயேசு 25
8. தேவன் நமக்குக் கொடுத்த... 31


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 36 April - 2023 Issue - 4

ஆசிரியர் உரை

## அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு

பரிசுத்த வேதாகமத்தை நேசித்து வாசிக்கும் பழக்கம் கொண்ட அநேகரால் அறிந்து வைக்கப்பட்டிருக்கும் வேதாகமக் கதா பாத்திரங்களில் யோசேப்பும் ஒருவர். ஒட்டுமொத்த வேதாகமத்தில் ஒரு 11 யோசேப்புகள் இருப்பதால், யோசேப்பு என்று நம் காதில் விழும்போது, எந்த யோசேப்பு என்ற கேள்வி எழும். ஒருவேளை, இது யதார்த்த நிலையாக இருந்தாலும், யோசேப்பு என்றவுடன் மற்ற எல்லாரையும் பின்னுக்குத் தள்ளி நம் மனக்கண் முன் துள்ளி வந்து நிற்பவன், முற்பிதாக்களில் மூன்றாமவரான யாக்கோபின் '**பல வருண அங்கி**' யோசேப்பு தான். இதற்குக் காரணம், இவன் வேதாகமத்தில் முதன் முதல் சொல்லப்பட்டிருக்கும் யோசேப்பு என்பதைத் தாண்டி, ஏற்ற இறக்கங்கள் கொண்ட இவன் வாழ்வில் நடந்த சுவாரசியமான நிகழ்வுகளும் ஒரு காரணம். அத்தோடு, இவன் பற்றிய காரியங்கள் கிறிஸ்தவக் குடும்பங்களின் பிள்ளை களுக்கு இளம் வயதிலேயே போதிக்கப்பட்டு பிஞ்சு மனங்களில் பதிந்து விடுவதும் மற்றொரு முக்கியக் காரணம். இதன் மூலம் இயேசு ஆண்டவரின் **வளர்ப்புத் தந்தையாகிய** யோசேப்பையே கூட ஒரு வகையில் இவன் பின்னுக்குத் தள்ளி விடுகிறான்.

இந்த இரண்டு யோசேப்புகள் தவிர எஞ்சியுள்ள ஒன்பது யோசேப்புகளில் '**அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு**' பற்றி இம்மாதம் நாம் காண உள்ளோம். இவன் கிறித்துவ சமுதாயத்தால் அறியப்பட வேண்டிய அளவுக்கு அறியப்படாத ஒரு மனிதனாகவே உள்ளான். **நம்மால் கனப்படுத்தப்படும்** மேலுள்ள இரண்டு யோசேப்புகளுக்கும் இவன் எவ்விதத்திலும் சளைத்தவனல்ல என்பதை நாம் கிட்டப்போய் காண உள்ளோம். இவன் பெயரோடு இவன் பிறந்த மண்ணின் பெயரும் ஒட்டி உள்ளது. இப்படிப் பேரும்,

ஊரும் ஒட்டி வருவது எல்லோருக்குமாக வேதாகமத்தில் சொல்லப்படவில்லை. **சிரேனே ஊரானகிய சீமோன்** [மத். 27:32], **பெத்சாயிதா ஊரானாகிய பிலிப்பு** [யோவான் 12:21] என்று சில பேர் மாத்திரம் இப்படியாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். இப்படி வரும்போது, பேரால் ஊருக்குப் பெருமையா அல்லது ஊரால் பேருக்கு பெருமையா என்ற கேள்வி எழுகிறது. ஆனால், நம் அரிமத்தியா ஊரான் காரியத்தில், நிச்சயமாக இவன் பேரால் தான் ஊருக்குப் பெருமை. எப்படியெனில், அரிமத்தியா என்பது வேறு எங்கும், எதற்கும் குறிப்பிடப்படவில்லை.

யூதருடைய பட்டணங்களில் ஒன்று என்று குறிப்பிடப்பட்டுள்ள அரிமத்தியா, எருசலேமுக்கு அருகாமையில் இருந்திருக்க வேண்டும். சரி, பட்டணம் பற்றிப் விட்டுவிட்டு, இம்மண்ணில் விழுந்தவன் பற்றி கவனிப்போம். இவன் பற்றிய காரியங்களை நான்கு நற்செய்தியாளர்களும் தவறாமல் எழுதித் தந்துள்ளனர் [மத். 27:57,58; மாற்கு 15:43,46; லூக்கா 28:50,51; யோவான் 19:38]. புதிய ஏற்பாட்டுச் சம்பவங்களில் இப்படி நான்கு நற்செய்தியாளர்களாலும் தரப்பட்டுள்ளவைகள் வெகு சிலவே. உதாரணமாக, ஏராளமான அற்புதங்கள் இயேசுவால் செய்யப்பட்டிருந்தாலும் 5 அப்பங்கள், 2 மீன்கள், 5000 புருஷர்கள் புசித்துத் திருப்தியான அற்புதம் மட்டும் தான் நற்செய்தி நூல்களிலும் இடம்பெற்றுள்ளது. இதற்கு இணையான முக்கியத்துவம் இவன் பற்றிய காரியங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

லூக்கா நற்செய்தியாளன் இவனுக்காகப் பயன்படுத்தியுள்ள வார்த்தைகள் நம் புருவத்தை உயரச்செய்கிறது. நோவா, யோபு போன்ற தேர்ந்த தேவ மனிதர்களுக்கான **நீதிமான், உத்தமன்** போன்ற பதங்கள் இவனுக்கும் தரப்பட்டுள்ளது. இன்னும், மாற்கு நற்செய்தியாளன் ஒரு படி மேலே சென்று **ராஜ்ஜியம் வரக் காத்திருந்தவன்** பழைய ஏற்பாட்டில் புலமை பெற்ற நியாய சாஸ்திரிகள், பரிசேயர், வேதபாரகர் போன்றோர் ராஜ்ஜியம் பற்றித் தவறான பார்வை கொண்டிருந்த அக்காலத்தில், இவன் ராஜ்யத்திற்காகக் காத்திருந்துள்ளான். இதன் மூலம், இயேசு தான் **மேசியா** என்பதில் இவனுக்கு எவ்வித ஐயப்பாடும் இருக்கவில்லை.

மேலும், கன்மலையில் வெட்டப்பட்ட தன்னுடைய புதுக் கல்லறையை இயேசுவுக்குக் கொடுத்ததன் மூலம் ஓர் 700 ஆண்டுகளுக்கு முன் உரைக்கப்பட்ட வேத வாக்கியம் [ஏசாயா 53:9] நிறைவேறக் காரணமாயிருந்துள்ளான். இவன் இத்தியா த்தைச் செய்திருக்காவிட்டால், இயேசுவின் சிலுவையிலறையப் பட்ட சரீரம் **குயவனுடைய நிலத்திலே** தான் அடக்கம் செய்யப்

பட்டிருக்கும். குயவனுடைய நிலம் என்பது குற்றவாளிகளுக்கும், அந்நியர்களுக்கும், கேட்பாரற்ற நிலையில் மரித்தவர்களுக்குமான ஓர் அவலமான இடம் (மத். 27:7).

இந்த அரிமத்தியா யோசேப்பு ஓர் ஐசுவரியவானாக இருந்துள்ளான். இதற்குக் காரணம் அவன் கொண்டிருந்த அபாரப் பின்னணி. உலக சரித்திரம் இவன் பற்றி கூடுதல் தகவல்களைக் கொடுக்கிறது. அதாவது, ரோம அரசாங்கத்தில் நம்ம ஊர் நாடாளு மன்ற உறுப்பினருக்கு இணையான பதவியில் இருந்தானாம். இன்னும் சுரங்கப் பொறியாளனுக்குரிய கல்வித் தகுதியை பெற்று, அன்றைய உலகின் பல பகுதியில் சுரங்கத் தொழிலை லாபகரமாக நடத்தியுள்ளான். செல்வாக்கும், செல்வமும் இவன் கொண்டி ருந்ததால் எருசலேம், எரிகோ, தமஸ்கு, ரோம், அரிமத்தியா போன்ற பட்டணங்களில் இவனுக்குச் சொந்தமாக வீடுகள் இருந்துள்ளன. ரோம அரசாங்கத்தில் இவன் பெற்றிருந்த செல்வாக்கு குறித்து ஒரு சரித்திர ஆசிரியர் இவ்விதம் கூறுகிறார். ''இவன் நினைத்திருந்தால் திபேரியு ராயனிடம் பேசி, இயேசுவுக் கான சிலுவை மரணத்தைக் கூடத் தடுத்து நிறுத்தி யிருக்க முடியுமாம்''. ஆயினும், இது தேவத் திட்டம் என்பதை இவன் ஏற்றி ருந்தபடியால் அம்முயற்சியை எடுக்கவில்லை. அட, அரிமத்தி யானே, நீ அவ்வளவு பெரிய ஆளா?

இவன் பற்றிய இன்னொரு தகவல் நமக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. இவன் **கனம் பொருந்திய ஆலோசனைக் காரன்**' (மாற்கு 15:43) என்பது. அதாவது, ஒட்டுமொத்த யூத மதத்தின் அனைத்து காரியங்களையும் கட்டுப்படுத்தும் உச்சபட்ச அதிகாரம் கொண்ட அமைப்பாகிய **சனகரீம் சங்கத்தின்** ஓர் அங்கம். அக்காலத்தில் திரளாக இருந்த யூதர்களில் **ஓர் 70 பேர் மட்டுமே** தகுதி பெறுவார். இங்கே போய் உட்காருவதற்கு மோசேயின் பிரமாணங்களில் முழுத் தேர்ச்சி உட்பட, பலமான பின்னணி கொண்டிருக்க வேண்டும். இயேசு ஆண்டவர் தன் ஊழியத்தை ஆரம்பித்த நாள் முதல் அவருக்கு எதிரான மனநிலையையும், செயல்பாட்டையும் காரம் குறையாமல் கொண்டிருந்த சனகரீம் சங்கத்தில் அங்கமாக இருந்து கொண்டு, இயேசுவுக்கும் அந்தரங்க சீடனாக இருந்துள்ளான் என்பது விசித்திரமாக உள்ளது. எத்தனை முறை இயேசுவுக்காக அந்த ஆலோசனை கூட்டத்தில் இவன் வாதிட்டு, வக்காலத்து வாங்கினானோ தெரியவில்லை!

இவன் பற்றிய உலக வரலாற்றின் இன்னொரு செய்தியையும் உங்கள் தகவலுக்காகத் தந்து விடுகிறேன். இயேசுவின் தாயாகிய மரியாளுக்கு இவன் சிறிய தகப்பன் முறையாம். தன் இளம் வயதில் மரியாள் பெற்றோரை இழந்த நிலையில், மரியாளைத் தத்தெடுத்து

வளர்த்ததோடு யோசேப்புடனான திருமண ஏற்பாட்டையும் இவன் தான் முன்னின்று செய்தானாம்.

இப்படி எல்லா வகையிலும் சீரும், சிறப்பும் பெற்று அத்தோடு மெய் பக்தியையும் தன்னோடு சேர்த்து வாழ்ந்த இந்த அரிமத்தியா ஊரான், தேவச் சித்தத்தின்படி இயேசு சிலுவையிலறையப்பட்டு, **பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்பு விக்கிறேன்** என்று மகா சத்தமாய் கூப்பிட்டு ஜீவனை விட்ட பிறகு [லூக்கா 23:46] பிலாத்துவினிடத்தில் போய் **துணிந்து** இயேசுவின் சரீரத்தைக் கேட்டு, நிக்கொதேமு என்னும் இன்னொரு ஆலோச னைக்காரனோடு சேர்ந்து [யோவான் 3:1–3; 19:38–42] யூதருடைய சகல முறைமைகளின்படி நல்லடக்கம் செய்துள்ளான்.

இயேசுவின் சரீரத்தைக் கேட்டு வாங்கினான் என்று மாத்திரம் இல்லாமல், **துணிந்து** என்றும் கூறப்பட்டுள்ளது. என்ன காரணம்? ஏனெனில், இவன் செயல்பாடு எல்லாவற்றையும் வெளிப்படுத்தும். அதன் மூலம் கனத்திற்குரிய இப்பதவி பறிபோகும். ஆனால், இதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் துணிந்து செயல் பட்டுள்ளான். வெளிப்படையாக இயேசுவின் பின் சுற்றித் திரிந்த, அந்த 12 பேர் உட்பட மற்ற சீடர்கள் பயந்து ஓடியபோது, அந்தரங்க சீடனாகிய இவன் எவ்வித அச்சமும் இல்லாமல், விளைவுகள் பற்றிக் கவலைப்படாமல் காரியத்தில் இரங்கினான். இப்படிக் கேட்டு வாங்கினதற்கு இன்னொரு காரணத்தையும் நாம் சேர்த்துக் கொள்ளலாம். மோசேயின் பிரமாணத்தில் தேர்ச்சி பெற்றிருந்த இவன், இயேசுவின் சரீரத்துக்கு அதே நியாயப்பிரமாண போதனையின்படி இழுக்கு வந்து விடக்கூடாது என்பதில் கவனமாக இருந்துள்ளான். எப்படியெனில், 'மரத்திலே தூக்கிப் போடப்பட்ட பிரேதம் இரவில் மரத்தில் தொங்காமல் அந்நாளிலே தானே அடக்கம் செய்யப்பட வேண்டும் [உபா. 21:22,23].

இப்படி பிலாத்துவிடம் சரீரத்தைக் கேட்டு வாங்கினதற்கு ஒரு துணிவு தேவைப்பட்டது போல, இயேசுவின் சரீரத்தைத் தொட்டு அடக்கம் செய்வதற்கும் துணிவு தேவைப்பட்டது. எப்படியெனில், இயேசுவின் சரீரத்தைக் கேட்டு வாங்கி அடக்கம் செய்யும்போது தன்னுடைய சரீரம் தீட்டுப்படுவதற்கு பிரமாணத்தின்படி வாய்ப் பிருந்தது. **செத்துப்போனவனுடைய பிரேதத்தைத் தொட்டவன் ஏழு நாள் தீட்டுப்பட்டிருப்பான்** [எண். 19:11]. ஏழு நாள் நீடிக்கும். இதன் மூலம் அவன் அடுத்த ஓய்வு நாளில் ஜெப ஆலயம் போக முடியாது. ஆனாலும், இயேசு என்று வந்த போது இவை களெல்லாம் அவனுக்கு ஒரு பொருட்டாகவே தெரியவில்லை.

சரி, இப்பொழுது நாம் கவனித்த இந்த அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பிடமிருந்து நமக்கான ஒரு மூன்று பாடங்களை நம் பக்தி வாழ்வுக்காக கவனிப்போம்.

1 **அரிமத்தியா ஊரானின் அசாத்திய தைரியம்**

அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பிடமிருந்து நமக்குக் கிடைக்கக் கூடிய முதல் பாடம், தேவனுக்கான வாழ்வில் தைரியமான செயல்பாடு அவசியம் என்பது.

நம்மைச் சுற்றி உள்ள உலகை உற்று நோக்கும் போது, **ஏழைகளைவிடக் கோழைகளே** அதிகம் காணப்படுகின்றனர். கோழைத்தனம் என்பது, எதிர்வரும் ஒரு கடும் சூழலையோ, எதிர்ப்பையோ, சவாலையோ அல்லது ஆபத்தையோ கண்டு அஞ்சிப் பதுங்கி ஒதுங்குவது. இக்கீழ்குணம் கிறித்துவத்தையும் விட்டு வைக்கவில்லை. கோழைகளுக்கு பஞ்சமில்லாத ஒரு மார்க்கமாகவே கிறிஸ்தவம் உள்ளது. ஆம், பரத்துக்கான வாழ்வில் எது தான் உண்மை என்று தெரிந்து கொள்வதற்கும், அப்படித் தெரிந்து கொண்டதை ஏற்றுக் கொள்வதற்கும் கூட பயப்படு கின்றனர். பரலோகத்தை வாஞ்சிக்கும் கிறிஸ்தவர்களுக்கு **அப்பரலோகில் கோழைகளுக்கு இடமில்லை** என்ற உண்மை புரியாமல் போனது விந்தையாக உள்ளது [வெளி. 21:8]. ஆனால், அரிமத்தியா யோசேப்பு இதற்கு விதிவிலக்காக இருந்துள்ளான்.

தேவனுக்கான வாழ்வில் அர்த்தமில்லாமல் ஒருவன் பயப்படும் போது, சம்பந்தப்பட்ட ஆள் தப்பிக்கலாம். ஆனால், உண்மையும், பக்தியும் அங்கே செத்துப்போகும். ஆபிரகாம் போன்ற தேவ மனிதர்கள் கூட உயிர் பயத்தினால், தங்கள் நேர்மையையும், பக்தியையும் பலியிட நேர்ந்தது [ஆதி. 12:11-13]. பயமும், கோழைத்தனமும் ஒட்டிப் பிறந்த இரட்டைப் பிள்ளைகள். ஒன்று வரும்போது இன்னொன்றும் தானாக வந்து சேரும். ஆனால், தேவனுக்குத் தங்களை மெய்யாகவே ஒப்புக் கொடுத்து வாழ்ந்தவர்கள் எச்சூழலிலும் பயத்துக்கு இடம் கொடுத்ததில்லை. இதற்கு உதாரணமாக பலரை நாம் அடையாளப்படுத்த முடியும். சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ போன்ற எபிரெய மனிதர்கள் ஏழு மடங்கு சூடாக்கப்பட்ட அக்கினி ஜுவாலையைக் கண்டு கிஞ்சித்தும் அஞ்சவில்லை [தானி. 3:8-18]. அதுபோலவே, தானியேல் சிங்கங்களிள் போடப்படும் நாள் வந்தபோது அச்சூழலை நம்பிக்கையோடு எதிர்கொண்டு மீண்டும் வந்தான் [தானி. 6:10-23]. மேலும், அப்போஸ்தலர்கள் ஆலோசனைச் சங்கத்தாரால் அடித்து, அச்சுறுத்தப்பட்டு, எச்சரித்து அனுப்பப்பட்ட நிலையிலும் தைரியமாக **இயேசுவே** கிறிஸ்து என்று இடைவிடாமல் உபதேசித்தார்கள் [அப். 5:40-42].

அருமையானவர்களே! நம்முடைய பக்தியின் இலட்சணம் எப்படியுள்ளது? இயேசுவின் நாட்களில் ஜெப ஆலயத்திற்குப் புறம்பாக்கப்படுவோம் என்று பயந்து, அநேக யூதர்கள் இயேசுவின்

மீதான விசுவாசத்தை அறிக்கையிடாமல் இருந்தது போல் உள்ளோமா? (யோவான் 12:42). அல்லது தேவனால் வருகிற மகிமையைத் தேடாமல், மனிதரால் வரும் மகிமைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறவர்களாக உள்ளோமா? (யோவான் 5:44). புதிய ஏற்பாடு போதிக்கும் உண்மையான சத்தியத்தையும், உண்மையான சபையையும் ஏற்றுக்கொள்ளும் போது, நாம் பாரம்பரியமாக அங்கம் வகிக்கும் சபைப் பிரிவை விட்டு வெளியேற நேரிடுமே என்று பயப்படுகிறோம் தானே? சத்தியத்துக்கு ஒப்புக்கொடுக்கும் போது, நம்முடைய குடும்பத்தாரும், நட்பு வட்டாரமும் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்களோ என்று அஞ்சுகிறோம் தானே!

ஒரு கணம் இந்த அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பை எண்ணிப் பாருங்கள். சகல சம்பத்துக்களோடு உயர்வான இடத்தில் இருந்தாலும், பக்தி உலகில் என்ன நடக்கிறது என்பதை உன்னிப்பாகக் கவனித்து, ஏற்றுக் கொள்ள வேண்டியவைகளை அடக்கமாக ஏற்றுக் கொண்டு, வெளிப்படுத்தும் நேரம் வந்தபோது, ஊரும், உறவும், உலகமும் என்ன நினைக்கும் என்றெல்லாம் கவலைப்படாமல் துணிந்து செயல்பட்டு இன்றளவும் பேசப்படும் மனிதனாக மாறியுள்ளானே!

II **அரிமத்தியா ஊரானின் ஆழ்ந்த வேத அறிவு**

அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பிடமிருந்து நமக்குக் கிடைக்கக்கூடிய இரண்டாம் பாடம், வேதாகமத்தில் ஆழ்ந்த அறிவு கொண்டிருப்பது அவசியம் என்பது.

உலக அறிவு குறித்துப் பேசும் போது ஆவென வாயைத் திறந்து கவனிக்கும் மானிடம், வேதாகமம் சார்ந்த அறிவு பற்றிப் பேசும்போது முகத்தில் சலிப்பை வெளிப்படுத்தி வேறு பக்கம் திரும்பிக் கொள்ளுகிறார்கள். இயேசு இந் நிலையைக் கடுமையாகச் சாடியுள்ளார். **நீங்கள் வேத வாக்கியங் களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங் கொள்ளுகிறீர்கள்** (மத். 22:29) என்று. வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்ப்பது தான் நித்திய ஜீவனுக்கு வழி வகுக்கும்(யோவான் 5:39).

இந்த அருங்குணம் நம்முடைய யோசேப்புக்குள்ளாக இருந்துள்ளது. ஆகவே, தான், யோவான்ஸ்நானனும், இயேசுவும் கூவிக் கூவிப் பிரசங்கித்த ‘**சபையாகிய தேவனுடைய ராஜ்ஜியத்துக்காகக் காத்திருக்க முடிந்தது**‘ (லூக். 23:51).

ராஜ்ஜியம் பற்றிய சரியான புரிதல் இல்லாத காலம் அது. தாவீதின் ராஜ்ஜியம் திரும்பக் கட்டப்படும் என்ற பெரும் எதிர்பார்ப்பு யூதர்கள் மத்தியில் பலமாக நிலவியதால், இயேசு போதிக்கும்

ராஜ்ஜியம் இம்மைக்குரியதா, மறுமைக்குரியதா என்ற குழப்பமும், தடுமாற்றமும் காணப்பட்டது. இயேசு மரித்து உயிரோடே எழுந்து 40 நாட்கள் காட்சி தந்து பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நாளிலே கூட, மூன்றரை ஆண்டுகள் அவருடைய போதனை களை நேரிடையாகக் கேட்கும் பாக்கியம் பெற்ற சீடர்கள், ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்ஜியத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் (அப். 1:6) என்று கேட்டிருக்கிறார்கள் என்றால் பார்த்துக்கொள்ளுங்களே, நிலைமை எப்படி இருந்தது என்று. அப்படிப்பட்ட சூழலில் இயேசுவுக்கு அந்தரங்க சீடனாக இருந்து கொண்டு, ராஜ்யம் பற்றிய போதனையில் முழுத் தெளிவு பெற்றவனாய் இருந்துள்ளான்.

வேதமும், வேதத்தின் மகத்துவமான காரியங்களும் இவ்வுலகில் இல்லாதவர்களுக்குத் தான் என்ற எழுதப்படாத விதி எல்லா இடங்களிலும் உள்ளது. அப்படிப் பார்த்தால் இந்த யோசேப்பு என்ன இல்லாதவவனா? செல்வாக்கு இல்லாதவனா? செல்வம் இல்லாதவனா? படிப்பு இல்லாதவனா? அந்தஸ்து இல்லாதவனா? ஆயினும், இவைகள் எல்லாம் இருந்தும், இருக்க வேண்டியது இல்லாமல் போய் விடுமானால், நம் நித்திய வாழ்க்கை அதோகதிதான் என்று உணர்ந்திருந்ததால் ராஜ்ஜியம் பற்றிய போதனையின் உண்மைத்தன்மையை அறிந்து அதற்காகக் காத்திருந்துள்ளான். இவனுக்குள்ளாக பெரோயா பட்டணத்தாரின் மனநிலை, ராஜ்ஜியமாகிய சபை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னமே இருந்துள்ளது! (அப். 17:11)

### III அரிமத்தியா ஊரானின் பெரும் தியாகம்

அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பிடமிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், பக்தி வாழ்வுக்கு தியாகம் அவசியம் என்பது. யோசேப்பு பற்றிச் சொன்ன மற்றதெல்லாம் சரி. ஆனால், தியாகம் என்று சொல்லுகிறீர்களே, அப்படி என்ன தியாகம் செய்துவிட்டான் என்று நீங்கள் கேட்கலாம். அவன் கன்மலையில் வெட்டப்பட்ட தன் கல்லறையைக் கொடுத்தது பற்றி நான் இங்கு பேசவில்லை. ஒரு வகையில் அதுவும் ஒரு தியாகம் தான். தனக்காகவோ, தன்னவர்களுக்காகவோ ஆயத்தம் செய்யப்பட்ட ஒன்றை பிறருக்காகக் கொடுப்பதும் தியாகக் கணக்கில் தான் வந்து சேரும். ஆனால், அதைத் தாண்டி அவன் தியாகத்துக்கு வேறு சில சான்றுகள் உள்ளன.

நம்ம அரிமத்தியான் இயேசுவின் சிலுவை மரணம் வரைக்கும் இயேசுவின் அந்தரங்க சீடனாக இருந்து, இயேசுவின் காரியங் களுக்கான தன் ஒட்டுமொத்த அங்கீகாரத்தை மறைமுகமாகத் தொடர்ந்து கொண்டிருந்தான். எப்பொழுது இயேசுவின் சரீரத்தை துணிந்து கேட்டு வாங்கி, இன்னொருஅந்தரங்க சீடனாகிய நிக்கொதேமுடன் சேர்ந்து யூத முழு முறையின்படி அடக்கம் செய்

தானோ அப்பொழுதே இவன் யார் என்பது அம்பலமாகி விட்டது. அது முதல், சனகரீம் சங்க உறுப்பினர் என்ற உயர் அந்தஸ்து இவனிடமிருந்து பிடுங்க நிச்சயமாக அப்படிப் பிடுங்கப்படும் என்பது இவனுக்குத் தெரிந்த நிலையில் கூட பதவியா? இயேசுவா? என்ற போராட்டம் வந்த போது இவன் இறுதியாகம் இல்லையா?

மேலும், நிக்கொதேமுடன் இவன் இணைந்து இயேசுவின் சரீரத்தைச் சுகந்த வர்க்கங்களுடனே சீலைகளில் சுற்றி இருவரும் இருவரும் கட்டினார்கள். அதைச் செய்யும்போது, மரித்துப் போன இயேசுவின் சரீரத்தைத் தொட வேண்டி வரும் என்பதும், அதன் மூலம் பிரமாணப்படி தான் தீட்டுப்பட நேரிடும் என்பதும், அது அவனை ஜெப ஆலயத்துக்குப் புறம்பே சில காலம் ஒதுக்கி வைக்கும் என்பதும், அது தேவனுக்கான காரியங்களில் இதுவரை நீதியோடு வாழ்ந்த தனக்கு ஒரு தொய்வை ஏற்படுத்தும் [எண். 19:11–13] என்பது தெரிந்திருந்தும் இயேசுவுக்கான கனத்தைக் குறைவில்லாமல் கொடுத்தான். இதை தியாகம் என்று சொல்லுவது தவறா?

அருமையானவர்களே! அரிமத்தியா ஊரானின் இப்படிப்பட்ட தியாகங்கள் எந்தக் கட்டத்தில் நடந்தது என்று கவனியுங்கள். அவர் சொன்னபடி மீண்டும் உயிர்த்து வருவாரா என்பதில் அவருக்கு அப்பட்டமான சீடர்களாக இருந்தவர்களுக்கே நம்பிக்கையில்லா மல் இருந்த நிலையில், அந்தரங்க சீடனாகிய இவன், தனக்கு ஏற்படப்போகும் நட்டம் குறித்து கொஞ்சமும் அக்கறை கொள்ளாமல், இன்றைக்கு என் இயேசுவுக்கு என்னால் சிறப்பாக எதைச் செய்ய முடியுமோ அதைச் செய்வேன் என்று செயல் பட்டுள்ளான்! அப்படித்தானே! இதற்குக் காரணம் வரப்போகும் ராஜ்ஜியம் பற்றி இவனுக்கிருந்த தெளிவான சிந்தை தான். ஆனால், நாமெல்லாம் எப்படி? உயிரோடு எழுந்த கிறிஸ்துவுக்காக விட்டுக் கொடுக்கவும், நட்டப்படவும், தியாகம் செய்யவும் தயாராக உள்ளோமா? தேவனுக்காகவும் அவருடைய வார்த்தைகளுக்காகவும், கிறிஸ்துவுக்காகவும், அவருடைய புதிய ஏற்பாட்டு உபதேசங்களுக்காகவும் துணிந்து செயல்பட வேண்டிய கட்டம் வரும்போது இந்த யோசேப்பின் மனநிலை கொண்டு இயேசுவின் காரியமாகச் செயல்படுகிறோமா? எப்படியெல்லாம் யோசிக்கி றோம்? என்னவெல்லாம் சொல்லி மழுப்பி நழுவுகிறோம்! தியாகம் செய்யவும், விட்டுக் கொடுக்கவும் நெஞ்சில் ஈரமில்லாமல், அசத்தியமான காரியங்களை நியாயப்படுத்துவதற்கு சத்தற்ற வாதங்களை சாமர்த்தியமாகபேசி முட்டுக் கொடுக் தானே!

இனியாவது திருந்துவோம்! இந்த அரிமத்தியா ஊர் யோசேப்பிடமிருந்து கிடைத்துள்ள பாடங்களைப் புத்தியோடு கற்று, பரம கானானுக்கான பாக்கியத்தை பிரகாசமாக்குவோம்! ஆமென்!!

✝

# வேதாகமம் பரலோகம் பற்றி பேசுகிறது

J.C. சோட்

**கி**றிஸ்துவின் இரண்டாம் வருகையில் நாம் மரித்துப் போவோம் அல்லது இந்த சரீரத்தைக் களைந்து போடுவோம் என்று வேதாகமம் போதிக்கிறது. [I தெச.4:16, 17]. இன்னும், அன்றியும் ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனிதனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறதென்று [ எபி.4:27] சொல்லப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலன் பவுல் இப்படியாக அறிவித்திருக்கிறார். ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும் படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும் [II கொரி.5:10].

இச்சந்தர்ப்பத்தில் ஒரு முக்கியமான கேள்வியென்னவெனில், ஒருவனுடைய மரணத்துக்கும், நியாயத்தீர்ப்பிற்கும் மத்தியில் என்ன நடக்கும்? என்பது. அதாவது, ஒருவனுடைய ஆத்துமா எங்கிருக்கும்? என்பது. அவன் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பானா? இன்னும் உணர்வுள்ளவனாக இருப்பானா? அல்லது கல்லறைக்குள்ளேயே தொடர்ந்து இருப்பானா? அல்லது சுயநினைவற்றவனாக மரித்தோருக்கான இடத்தில் இருப்பானா?

லாசரு – ஐசுவரியவான் பற்றிய உவமையை லூக்கா 16: 19–3 வசனப் பகுதியில் இயேசு சொல்கிறார். ஏழை மனிதனாகிய லாசருவின் ஆத்துமா தேவ தூதர்களாலே ஆபிரகாமின் போய் விடப்பட்டது. அந்த இடம் பரதீசு என்று விவரிக்கப்பட்டுள்ளது. ஆனால், ஐசுவரியாவானின் ஆத்துமா அக்கினி ஜீவாலை நிறைந்த வேதனைப்படும் இடத்திற்குச் இடத்திற்குச் சென்றுள்ளது. அங்கே ஐசுவரியவான் சத்தமிட்டு தகப்பனாகிய ஆபிரகாமே நீர் எனக்கு இரங்கி லாசருவின் விரல் நுனியைத் தண்ணீரில் தோய்த்து என் நாவைக் குளிர பண்ணும் படி அனுப்ப வேண்டும் என்று அபயமிட்டான். அதற்கு ஆபிரகாம் மகனே, நீ பூமியில் உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசரும் அப்படியே தீமைகளை அனுபவித்தான். இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான் நீயோ வேதனைப்படுகிறாய் என்றான்.

அத்தோடு இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்து வரவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்து வரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும் பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றான்.

அங்கே அந்த ஐசுவரியவான், அப்படியானால், தகப்பனே என்னுடைய ஐந்து சகோதரர்களும் இந்த வேதனையுள்ள இடத்திற்கு வராதபடி லாசருவை அனுப்ப வேண்டிக் கொண்டான். அதற்குப் பதிலளித்த ஆபிரகாம், அங்கே மோசேயும், தீர்க்கதரிசிகளும் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒருவன் செவி கொடுக்கவிட்டால் மரித்தோரிலிருந்து ஒருவன் சென்றாலும் நம்பமாட்டார்கள் என்றார். இதில் அடங்கியுள்ள ஓர் உண்மையென்னவெனில், மரித்தவர்கள், மரணத்திற்குப் பிறகு தங்கள் நிலைகளை மாற்றவோ அல்லது பூமிக்குத் திரும்பி வந்து உயிரோடிருப்பவர்களுக்குக் காட்சடியளிக்கவோ முடியாது என்பது.

**உயிர்த்தெழுதலும், நியாயத்தீர்ப்பும் எப்பொழுது நடக்கும்?**

இயேசு சொன்ன உவமையின் படி ஐசுவரியவான் வேதனையுள்ள இடத்திலும், லாசரு தேற்றப்படக்கூடிய இடத்திலும் ஏற்கனவே இருக்கிறார்கள். அப்படியானால், பொதுவான உயிர்த்தெழுதலும் [ யோவான் 5:28,29] நியாயத்தீர்ப்பும் எதற்கு அதினால் என்ன பயன் என்று சிலபேர் கேட்கலாம். ஆனால், இங்கே குழப்பம் ஒன்றுமில்லை. கவனியுங்கள், இப்பூமியில், ஒரு கொலைக்காரன் பிடிக்கப்படும் பொழுது அவனுக்கான தீர்ப்பு வரும் வரைக்கும் சிறையில் அடைக்கப்படுகிறான். குற்றத்திற்கான தீர்ப்பு வந்த பிறகு தகப்பனைக் கால முழுவதும் சிறையில் வைக்கப்படுவான். அது போலத்தான் நீதிமானான ஒருவன், உண்மையுள்ள ஒரு கிறிஸ்தவன் மரிக்கும் போது அவன் உனடியாகப் பரதீசு செல்வான் துன்மார்க்கமான ஒருவன் மரிக்கும் போது உடனடியாக வேதனையுள்ள இடத்திற்குப் போவான்.

பிறகு இயேசு வரும் போது [ ஐ தெச.4:16] எல்லோரும் அவருடைய சத்தத்தைக் கேட்பார்கள். அப்பொழுது கல்லறைகளிலிருந்து சரீரம் உயிர்ப்பிக்கப்பட்டு பரத்திலோ அல்லது வதனையுள்ள இடத்திலோ உள்ள ஆத்துமாக்களோடு ஒன்றிணைக்கப்பட்டு, அழியாத ஒரு மேனிக்கு மறுரூபமாக்கப்பட்டு நியாயதீர்ப்படையவும், தண்டனையைப் பெற்றுக் கொள்ளவும் கர்த்தருக்கு முன்பாக வெளிப்படும் [அப்.17:31; மத். 25:31-46]. இறுதியாக இயேசு ஆண்டவரின் வார்த்தையின் படி, துன்மார்கரும், இரட்சிப்படையாதவர்களும் நித்திய ஆக்கினைக்கும், நீதிமான்கள் நித்திய ஜீவனுக்கும் போவார்கள் [ மத். 25:46].

**தொடரும் ....**

பெண்கள் பகுதி

# ஏற்ற துணை என்பதன் பொருள் என்ன?

Sis. ரேச்சல் ராஜநாயகம்

எல்லா மிருக வகைகளும் சிருஷ்டிக்கப்பட்ட பின்பு ஆதாம் ஒவ்வொரு சிருஷ்டிப்புக்கும் பெயர் வைத்தான். ஆனால், ஆதாமுக்கோ ஏற்ற துணை இன்னும் உண்டாக்கப்படவில்லை. (ஆதி. 2:20) தேவன் தம்முடைய சாயலிலே மனிதனை உண்டாக்கி அவனுக்கு அறிவு, உணர்வு, அழியாத ஆவி, இவற்றைக் கொடுத்தார். ஏனென்றால், இவனுக்கும், தேவனுக்கும் எப்போதும் அன்பும், ஐக்கியமும் இருக்கவேண்டுமென்று. இப்போது மனிதனாகிய ஆதாம் தேவனால் உண்டாக்கப்பட்ட இந்த அதிசய உலகத்தில் உள்ளவைகளைப் பற்றி தன் கருத்தை பரிமாறிக் கொள்ள தன்னைப்போல் ஒரு சிருஷ்டி இல்லையே என்று உணர்ந்தான்.

சரியாகப் பார்த்தால், திட்டமிட்ட மனிதப் படைப்பில், ஆதாம் வெறும் பாதியாக இருந்தான். அவன் தானாகவே வாழ்ந்து செயல்பட்டுக் கொண்டு தன்னை ஒரு பூரணமானவனாக எண்ணிக்கொண்டிருந்தாலும், தேவன் அவன் ஒரு முழுமையானவனாக இருக்க வேண்டுமானால், பால் சம்பந்தமாகவும், சரீரப் பிரகாரமாகவும், மனதளவிலும், உணர்ச்சிப் பூர்வமாகவும், சமுதாயத்திலும், ஆவிக்குரிய ரீதியிலும் ஆதாமுக்கு கட்டாயம் அவனைப்போல ஓர் உயிர் தேவையென்று அறிந்திருந்தார். ஆகவே, ஆதாம் தன் தனிமையை உணர்ந்த போது, தேவன் அவனுக்கு அயர்ந்த நித்திரையை வரவழைத்து அவனுடைய பக்கவாட்டில் இருந்து, ஒரு விலா எலும்பை எடுத்தார். விலாவிலிருந்து – மண்ணிலிருந்து அல்ல. தேவன் பெண்ணை உண்டு பண்ணி மனிதனிடத்திற்கு கொண்டுவந்தார். ஆதாம் கூறுகிறான் ' **அப்பொழுது ஆதாம்; இவள் என் எலும்பின் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப் பட்ட படியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான்** (**ஆதி.**2: 23)

இன்றைய உலகத்திலே திருமணமே ஆகாத ஆண்களையும், தனியாகவே வாழ விரும்பும் பெண்களையும் நாம் பார்க்கிறோம். சிலர், தேவனுக்கென்று சேவை செய்வதற்கு தங்களை ஒப்புக் கொடுத்து விடுகிறார்கள். மனித உறவுகளால் உண்டாகும் அன்பு தேவன் மீது வைக்கும் அன்பால் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

மற்றும் சிலர், பலவிதமான சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் திருமணத்தைத் தள்ளி விடுகிறார்கள். ஆனால், பெரும்பாலான ஆண்களும், பெண்களும் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள திருமணம் செய்து குடும்பம் நடத்த ஆசைப்படுகிறார்கள். மனிதனுக்கு, அவன் மனைவியின் அன்பும் ஆதரவும் தேவைப் படுகிறது. அவள்தான் குடும்பத்தை உருவாக்குவதில் உதவியாய் இருப்பவள். பெண் அரவணைப்புக்காகவும், பாதுகாப்பிற்காகவும் தன் கணவனின் உதவியை நாடுகிறாள். இருவருமே தங்களுக்குப் பிறகு தங்கள் பிள்ளைகள் வாழவேண்டும் என்ற நோக்கத்தோடு புதிய உயிரை உண்டாக்குவதில் விருப்பள்ளவர்களாக இருக்கிறார்கள்.

மனிதனுக்கும், விலங்குகளுக்கும் இடையிலான ஒற்றுமையை ஒப்பிட்டுப் பார்த்தால் எந்தவொரு பெண்ணும் எந்த ஒரு ஆணுக்கும் ஏற்றவளாகவே இருக்கிறாள். ஆனால், மனித இனத்தில் குறிப்பிட்ட ஆண்களும், பெண்களும் ஒருவருக்கொருவர், பொருத்தமற்றவர்களாக இருக்கிறார்களென்பதை நாம் அறிவோம். அவர்கள் **உயரத்தில்** ஒரே மாதிரி இருப்பதில்லை. சில நேரங்களில் மெத்த படித்த ஒரு ஆண் படிப்பறிவில்லாத ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்கிறான். அவனைத் தவிர அவளுக்கு இந்த உலகத்தில் வேறொன்றம் தெரியாது.

சில நேரங்களில் சாமர்த்தியமாக அறிவுமிகுந்த பெண்கள் குறுகிய புத்தியுடைய ஆண்களை திருமணம் செய்து தங்கள் வாழ்வில் பெரிய தவறை செய்து விடுகிறார்கள். வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுப்பதென்பது, எவ்வளவு ஆராய்ந்து செயல் படவேண்டிய ஒன்றாக உள்ளது. இருவருடைய குணநலங்களும், எல்லா வகையிலும் ஒத்துப் போகக் கூடியதாக இருக்கவேண்டும்.

எவ்வாறு பெண் ஒரு துணையாக இருக்க முடியும்? ஆரம்பத்திலேயே பார்த்தபடி அவள்தான், கணவனுக்கு வாழ்நாள் முழுவதும் துணையாக இருக்கிறவள். ஆதியிலிருந்தே விவாகரத்து என்ற ஒன்று ஏற்பட தேவன் விரும்பவேயில்லை. வாழ்க்கையில் ஒரு பெண்ணுக்கு ஒரு ஆண் என்று தேவன் திட்டமிட்டிருந்தார். இயேசுக் கிறிஸ்து இதை மீண்டும் வலியுறுத்தும் வண்ணமாகவே, அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக; ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும் நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியினால் அவர்கள்

இருவராயிராமல்,ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார். (மத்.19:4–6)

**அவனுக்கு ஏற்ற துணை** என்பதின் பொருள் என்னவெனில், ஆண்களால் ஏற்படும் இடைவெளியை இவள்தான் நிரப்ப வேண்டும். ஒருவேளை அவன் அதை நிரப்ப முடியாத இயலாமை யில் இருக்கலாம் அல்லது அவன் மற்ற காரியங்களை சந்திக்க வேண்டிய, வாழ்க்கையின் மற்ற பொறுப்புகள் அவனுக்கு நிறைய இருக்கலாம். எந்தவொரு விவசாயும் தன் மனைவி, குழந்தை களின் உதவியின்றி நடவும், பயிர்களை அறுவடை செய்யவும் இயலுமா? எத்தனை வியாபாரிகள் தங்கள் கணக்கு வழக்குகளை பார்க்கவும், புதிய பொருட்கள் வாங்க கோரிக்கை அனுப்பவும், கடைகளை மேற்பார்வையிடவும் மனைவிகளின் உதவியை சார்ந்திருக்கிறார்கள் தெரியுமா? புதிய ஏற்பாட்டில் கூடாரத் தொழில் செய்யும் ஆக்கில்லாவுக்கு அவன் மனைவி பிரிஸ்கில்லா உதவியா யிருந்தாள். யூதரெல்லாரும் ரோமபுரியை விட்டுப் போகும்படி கிலவு திராயன் கட்டளையிட்டபடியினாலே, இத்தாலியாவி லிருந்து புதிதாய் வந்திருந்த பொந்து தேசத்தானாகிய ஆக்கில்லா என்னும் நாமமுள்ள ஒரு யூதனையும் அவன் மனைவி யாகிய பிரிஸ் கில்லாளையும் அங்கே கண்டு, அவர்களிடத்திற்குப் போனான். அவர்கள் கூடாரம் பண்ணுகிற தொழிலாளிகளாயிருந்தார்கள்; தானும் அந்தத் தொழில் செய்கிறவனானபடியினாலே அவர் களிடத்தில் தங்கி வேலைசெய்து கொண்டுவந்தான். (அப். 18:2,3)

வேதாகமத்தின்படி பார்த்தால், பெண்களின் அடிப்படை வேலை, இந்த உலகிற்கு குழந்தைகளை பெற்றுக் கொடுப்பதும் அவர்களையும், அவள் கணவனையும் கவனமாய்ப் பார்ப்பதும், தன் வீட்டை கவனிப்பதும்தான். அப்போஸ்தலனாகிய பவுல் தீத்துவுக்கு எழுதும் போது 'தேவ வசனம் தூஷிக்கப்படாதபடிக்கு பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும் வீட்டில் தரித் திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்கு கீழ்ப்படி கிறவர்களுமாயிருக்கும்படி அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற் காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும், முதிர் வயதுள்ள ஸ்தீரிகளுக்குப் புத்தி சொல்லு' என்கிறார். (தீத்து. 2:4,5 ) இளம் விதவைகளுக்கு அறிவுரையாக தீமோத்தேயுவுக்கு கூறும்போது – திருமணமாகாத இளம் பெண்களுக்கும் இது சரியாகப் பொருந்தும். ஆகையால், இளவயதுள்ள விதவைகள் விவாகம் பண்ணவும், பிள்ளைகளைப் பெறவும், வீட்டை நடத்தவும், விரோதியானவன் நிந்திக்கிறதற்கு இடமுண்டாக்காமலிருக்கவும் வேண்டு

மென்றிருக்கிறேன் (1.தீமோ.5:1–4) என்றார்.

கணவன் தன் குடும்பம் வாழ்வதற்கென்று சம்பாதிக்கும்போது பெண்ணானவள் பிள்ளைகளைப் பெற்று வளர்த்து, வீட்டையும் சமாளித்து, தன் வேலையை சரியாகச் செய்தால், அதுவே ஒரு பெண்ணுக்கு ஏற்றதாக இருக்கும். பெண்களுக்கென்று கொடுக்கப்பட்டிருக்கும் இந்தப் பொறுப்பின் முக்கியத் துவத்தை சிலர் உணராமல், இதை இழிவான தொழிலென்றும், சங்கடமான ஒன்று என்றும் கருதுகின்றனர். அடுத்த தலைமுறையின் ஆத்துமாக்களை நித்தியத்திற்கு வழிநடத்தும் சிலாக்கியத்தையும் அவர்கள் வாழ்க்கையை சீர்படுத்தும் வேலையையும் விட வேறு எந்த உயரிய பணிகளையும் தேவன் பெண்களுக்கு பரிசாககொடுத்திருக்க முடியாது. குற்றங்கள் மலிந்து, ஒழுக்க ரீதியான பிரச்சனைகள் தீவிரமாக வளர்ந்து வருவதை இன்றைய உலகிலே நாம் பார்க்கிறோம். இதைப் பார்க்கும்போது தாய்மார்கள் தங்கள் வீட்டில் இருந்து செய்யவேண்டிய வேலை நிறைய உள்ளது என்பது நமக்கு விளங்குகின்றது. இல்லாவிட்டால் குடும்பம் அழிவுக்கு செல்லும் நிலை வந்துவிடும். ஏன் இவ்வளவு பிரச்சனை என்றால் ஆண்களுக்கு சரியாக பெண்களும் வீட்டை விட்டு வெளியே வேலைக்கு செல்லுவதால்தான். இதற்கு எந்த காரணம் வேண்டுமென்றாலும் கூறலாம். பெண்கள் இப்படி வேலைசெய்வதின் அவசியம் எதுவாகவும் இருக்கலாம். பலமடங்கு வீடுகள் அழிவுப்பாதையில் செல்லுகிறதென்றால் தேவன் மனைவிகளுக்கென்றும், தாய்மார்களுக்கென்றும் கொடுத்திருக்கிற கட்டளைக்கு கவனம் செலுத்தாமல் போவதேயாகும்.

குழந்தைகளையும், வீட்டையும், பாதுகாக்கவும் வேலையோடு கூட, ஏற்ற துணை என்பவள் தன் கணவனின் அருகில் ஒரு சொத்தாக நிற்க தன்னைத் தயார் செய்து கொள்ளவேண்டும். அவள் தோற்றத் திற்கு அவன் அனுமதியளிக்கும் வகையில் அவள் நல்ல உடைகளை உடுத்திக்கொள்ள வேண்டும். தன் கணவனின் எண்ணங்களை பரிமாறிக் கொள்ளவும் அவனுடைய தேவைகளை அறிந்து, தங்கள் சொந்த பிரச்சனைகளையும், மற்ற வெளிப்பிரச்சனைகளையும் உணர்ந்து செயல்படும்படியாக தன் மனதை அவள் வளர்த்துக்கொள்ள வேண்டும். உணர்வுப்பூர்வமான அவனுடைய தேவைகளை சந்திப்பதில் முனைப்புக் காட்டுகிறவள அவனை மிகவும், சந்தோஷபடுத்துவதும், அவனுடைய வாழ்க்கையில் நன்மையான காரியங்கள் செய்வதுமே தன் அவள் இலக்காக கொள்ளவேண்டும். இப்படி ஒரு வெற்றியுள்ள மனைவி தன் கணவனுக்கு உற்ற நட்புக்குரியவளாகவும், நெருங்கிய நம்பகமுள்ளவளாகவும் இருக்கிறாள்.

# எந்நேரமும் எப்பொழுதும் முழு மனதோடு

Dr. **ஏபில் நாயகம்**

**கி**றிஸ்துவுக்குள் பிரியமான வாலிபர்களே! உங்கள் யாவருக்கும் இன்பராம் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். பரிசுத்த ஆவியின் ஏவுதலினாலே எழுதப்பட்ட பரிசுத்த வேதாகமம் இந்த பூமியில் நாம் தேவனுக்கு பிரியமான ஒரு வாழ்க்கையை வாழ நமக்குப் போதுமானதொரு வழிகாட்டியாக இருக்கிறது. தேவனுடைய வசனம் வாலிபர்களாகிய நமக்கு நம்முடைய வழியைப் பரிசுத்தப்படுத்தவும், உலகத்தால் கறைபடாதபடி நம்மை காத்துக் கொள்ளவும் உதவுகிறது என்று சங்கீதம் 119:9 இல் நம் வாசிக்கிறோம். வேதத்தை படிக்கும் போதெல்லாம் நாம் நம்மை மெருகேற்றிக் கொள்ளத் தேவையானப் அனைத்து காரியங்களையும் அது நமக்கு வெளிப்படுத்தும். இம்மாதம் ஆகாய் தீர்க்கதரிசன புத்தகத்திலிருந்து சில காரியங்களை கற்றுக் கொள்வோம்.

பாபிலோனிலே அடிமைத்தனத்தின் நாட்கள் முடிந்து இஸ்ரவேலர்கள் மீண்டுமாக எருசலேக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். அப்படி எருசலேக்கு வந்தவர்கள் தேவாலயம் இடிக்கப்பட்ட நிலையில் இருப்பதை அறிந்திருந்தும் அதை கண்டு கொள்ளாமல், தங்களுக் கென்று சிறப்பான குடியிருப்பை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் ஆர்வமாக இருந்தார்கள். இந்த சிந்தையை தேவன் விரும்பாமல், அந்த ஜனங்களைச் சரி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆகாய தீர்க்கதரிசியை தேவன் இஸ்ரவேலரிடம் அனுப்பினார். இந்த இரண்டு அதிகாரத்தையும் நாம் கவனிக்கும் போது, தேவன் இரண்டு முறை இஸ்ரவேல் ஜனங்களைச் சாடுகிறார். முதலாவது எதற்கு என்று நாம் கவனித்தால் தேவனுடைய ஆலயம் பாழாய்க் கிடக்கும் போது ஜனங்கள் வசதியான குடியிருப்பை விரும்பி அதிலே வாழ்ந்த பொழுது. இந்த இரட்டை நிலைப்பாட்டை தேவன் கண்டித்து அவர்களைச் சாடுகிறார்.

1 வது அதிகாரம் 6 – 11 வசனங்களை நாம் கவனித்தால், தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஆசீர்வாதக் குறைச்சலை ஏற்படுத்து கிறார். நிறைவு இல்லாத வாழ்க்கையை அவர்களுக்கு கொடுத்தார். நீங்கள் புசித்தும் திருப்தியாகவில்லை, குடித்தும்

பரிபூரணமடையவில்லை, வஸ்திரம் உடுத்தியும் ஒருவனுக்கும் குளிர்விடவில்லை, கூலியை சம்பாதிக்கிறவன் பொத்தலான பையிலே அதை போடுகிறான் என்று எடுத்துச் சொல்லி அவர் களுடைய நிலையை தேவன் ஜனங்களுக்குப் புரிய வைத்தார். அதற்கான காரணம், தேவனுடைய ஆலயம் பாழாய்க் கிடக்கும் பொழுது அதைக்கண்டு கொள்ளாமல் இருந்ததன் விளைவுதான். ஆகாய தீர்க்கதரிசியின் வார்த்தைகளுக்கு ஜனங்கள் **செவி கொடுத்து,** கர்த்தருக்குப், பயந்து தேவாலயத்தை மீண்டும் கட்ட ஆரம்பித்தார்கள். தேவனும் அவர்களுடைய வேலையை அங்கீகரித்து, தம்முடைய மகிமையை தேவாலயத்தின் மீதும், சமாதானத்தை ஜனங்கள் மீதும் கட்டளையிட்டார்.

ஆனால், இரண்டாம் அதிகாரத்தின் வசனங்கள் 10 –18 வசனங்கள் வரை நாம் வாசிக்கும் பொழுது, மீண்டுமாக தேவன் ஜனங்களை சாடுகிறார். இந்த முறை கட்டப்பட்ட தேவாலய த்திலேயே ஜனங்கள் கொண்டு வந்து படைத்த பலிகள் தேவனுடைய சமூகத்திலே **தீட்டுப்பட்டிருக்கிறது** என்று சொல்லுகிறார். பிரியமானவர்களே, நாம் நன்றாக கவனிக்க வேண்டிய பகுதி இதுதான். முதல் முறை அவர் சாடின பொழுது, தேவாலயத்தின் வேலையை செய்யாமல் இருந்ததற்காக, அதை கண்டு கொள்ளாமல் இருந்ததற்காக ஆசீர்வாத குறைச்சல் ஜனங்களுக்கு ஏற்பட்டது. இந்த முறை தேவாலயம் கட்டி முடித்த நிலையிலும் தேவன் அவர்களைச் சாடுகிறார்.

தேவனுக்கென்று செலுத்தும்படியான பலிகளை தேவாலயத் திற்கு கொண்டு வருகிறார்கள். அந்த பலிகள் தீட்டுப்பட்டிருக்கிறது என்று தேவன் கூறுகிறார். ஒருவேளை நாம் யோசிக்கலாம், தேவாலயம் கட்டப்பட்டாயிற்று ; கட்டப்பட்ட தேவாலயத்தில் தேவனுடைய மகிமையும் வந்தாயிற்று; ஜனங்களும் தேவனை தொழுது கொள்ளவும், பலிகளை செலுத்தவும் தொடங்கி விட்டார்கள்; பிறகு ஏன் தேவன் அவர்களைச் சாடினார்? பிரியமானவர்களே, ஏதோ ஒரு காரணத்திற்காக தேவன் இந்த ஜனங்களுடைய பலிகளை ஏற்றுக்கொள்ளாமலிருக்கவில்லை.

நாம் முதலாவது 10 – 13 வசனங்களில் தேவன் ஆகாய் மூலம் சொல்ல வரும் காரியத்தை கவனிப்போம்.

11. ஒருவன் தன் வஸ்திரத்தின் தொங்கலிலே பரிசுத்த மாம்சத்தைக் கொண்டு போகையில் தன் வஸ்திரத்தின் தொங்கல் அப்பத்தையாகிலும், சாதத்தையாகிலும், திராட்ச ரசத்தையாகிலும், எண்ணெயையாகிலும், மற்றெந்த போஜன பதார்த்தத்தையாகிலும் தொட்டால் அது பரிசுத்தமாகுமோ என்று நீ ஆசாரியரிடத்தில் வேத நியாயத்தைப்பற்றிக் கேள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.

12. அதற்கு ஆசாரியர்கள் பிரதியுத்தரமாக: பரிசுத்தமாகாது என்றார்கள்.

13. பிணத்தால் தீட்டுப்பட்டவன் அவைகளில் எதையாகிலும் தொட்டால், அது தீட்டுப்படுமோ என்று ஆகாய் பின்னும் கேட்டான்; அதற்கு ஆசாரியர்கள் பிரதியுத்தரமாக: தீட்டுப்படும் என்றார்கள்.

பிரியமானவர்களே, இந்த வசனங்களின் மூலமாக தேவன் ஜனங்களுக்கு இரண்டு காரியத்தை வலியுறுத்த விரும்புகிறார். முதலாவதாக, ஒருவரிடம் இருக்கும் பரிசுத்தம் மற்றொருவரை இரட்சிக்காது. இரண்டாவது, பாவமும் பரிசுத்தமும் ஒருசேர இருக்க முடியாது. அதுமட்டுமல்ல, பாவம் சகல காரியத்தையும் கெடுக்கும். இந்த இஸ்ரவேல் ஜனங்கள் தேவாலயத்தை கட்டி முடித்து விட்டோம், எனவே, கடமைக்காக நாம் செலுத்த வேண்டிய பலிகளை செலுத்தி விட்டால் போதும், தேவன் நம்மை ஆசீர்வதித்து விடுவார் என்று கணக்குப் போட்டார்கள்.

இன்றைக்கும் இதைப் போன்று தப்பு கணக்கு போடுகிற பலரை நாம் பார்க்க முடியும். அவ்வளவு ஏன், சில நேரங்களில் நாமே அப்படிப்பட்ட தப்பு கணக்கு போட்டு விடுகிறோம். நல்ல சபையில் அங்கம் வகிக்கிறோம், நல்ல கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்திருக்கிறோம், அதிகமான காணிக்கை கொடுக்கிறோம், எனவே, தேவன் நம்மை ஆசீர்வதித்து தான் ஆக வேண்டும் என்று நாம் நினைத்து விடுகிறோம். பிரியமானவர்களே இந்த ஜனங்களிடம் தேவன் கண்ட ஒரு காரியம் 17 ஆம் வசனத்திலே சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனாலும், நீங்கள் என்னிடத்தில் மனதை திருப்பாமல் போனீர்கள். முழு மனதோடும், முழு இருதயத்தோடும் தேவனை சேவிக்க வேண்டும். தேவனுடைய சமூகத்தில் செய்யப்படும் எந்த ஒரு காரியமும் முழு மனதோடு செய்யப்படாமல் இருக்குமேயானால், அது தேவனாலே அங்கீகரிக்கப் படுவதில்லை. அதுமட்டுமல்ல, மறைமுகமான பாவங்களோடும், எண்ணங்களோடும் நாம் இருந்து கொண்டு, தேவனுக்கான நற்கிரியைகளை நாம் செய்ய முடியாது. பரிசுத்தமும், பாவமும் ஒருசேர இருக்க முடியாது என்பதை தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு சொன்னார் (வசனம் 13). மறை முகமான பாவங்களோடு பரிசுத்தமான காரியத்தை நாம் செய்தால் அந்தப் பரிசுத்தமான காரியம் பாவமாக மாறிவிடுகிறது. அப்படி இருக்கும் பட்சத்தில், ஒருவேளை நாம் நினைத்துக் கொள்ளலாம் நான் தேவனுக்காக பரிசுத்தமான காரியங்களை செய்கிறேன் என்று; சபைக்குத் தேவையான காரியங்களை செய்கிறேன் என்று;

ஆனால் தேவனாலே அது தீட்டு என்று பார்க்கப்படுகிறது.

இந்த ஜனங்கள், தேவனுக்காக ஆலயத்தை கட்டி முடித்தார்கள். ஆனால், அதைத் தொடர்ந்து அவர்கள் பலிகளை செலுத்தும் பொழுதும், தேவனுக்கான காரியங்களைச் செய்யும் பொழுதும் முழு மனதோடு செய்யாமல் இருந்தார்கள். அது மட்டுமல்ல அவர்களுக்கு மத்தியில் பாவம் இருந்தது. ஒருவேளை, இந்த ஜனங்கள் நினைத்திருக்கலாம், நாம் தான் தேவனுக்கென்று ஆலயத்தை கட்டி விட்டோமே, தேவன் இனி நம்மை ஆசீர்வதிப்பார் என்று. அவர்கள் என்னதான் ஆலயத்தை கட்டி முடித்து இருந்தாலும், தேவனுடைய காரியம் என்று வரும்பொழுது, அவருக்கான பலியை செலுத்தும் பொழுதும் பரிசுத்தத்தையும், உண்மையையும், முழு மனதோடு செய்யப்படும் காரியங்களையும் தேவன் பார்த்தார். அது இல்லை என்று தெரிந்தவுடன், அவர்களுக்கு ஆசீர்வாத குறைவை அளித்து, நிறைவில்லாத ஒரு நிலையை, பூரணம் இல்லாத ஓர் நிலையைக் கொடுத்தார்.

இரக்கமுள்ள தேவன், அவர்களுடைய நிலையைக் கண்டு, ஆகாய் தீர்க்கதரிசியின் மூலமாக எச்சரிப்பை அவர்களுக்குக் கொடுத்து அவர்களுடைய வழிகளை அவர்கள் சிந்தித்துப் பார்க்கும்படியான ஒரு சூழலை ஏற்படுத்திக் கொடுத்தார். இது நம் தேவனுடைய அலாதியான அன்பையும், இரக்கத்தையும், கரிசனையையும் காட்டுகிறது.

19 வசனத்திலே நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன் என்று அந்த ஜனங்களுக்கு சொல்வதை நாம் கவனிக்க முடியும். பிரியமானவர்களே, கிறிஸ்துவுக்குள் தேவனால் நமக்கு அருளப் பட்டிருக்கிற அனைத்து ஆசீர்வாதங்களும் நமக்கு உண்டு. ஆனால், அந்த ஆசீர்வாதங்கள் அனைத்தும் நிபந்தனைகளோடு வரும். தேவனுக்காக வேலைகளை அரைகுறையான மனதோடு செய்து அதன் மூலமாக தேவ ஆசீர்வாதத்தை நாம் பெற்றுக் கொள்ள முடியாது. அது மட்டும் அல்ல, மறைமுகமான பாவத்தோடு என்னதான் நற்காரியங்களை நாம் செய்தாலும் தீட்டான காரியம் பரிசுத்தத்தையும் தீட்டாக்கும். எனவே, சுத்த இருதயத்தோடும் முழு மனதோடும் தேவனைத் தேடுவதும், அவரை நாடுவதும் மட்டுமே நமக்கு பூரண ஆசீர்வாதத்தையும், பூரண சமாதானத்ததையும் தரும். அவர் இன்று முதல் நம்மை ஆசீர்வதிக்க ஆயத்தமாக இருக்கிறார். அதைப் பெற்றுக்கொள்ள நாம் நம்மைத் தகுதிப்படுத்திக் கொள்வோமா? ✝

சிறுவர் பகுதி

# தயாரா?

Dr. பிரெய்ஸி

**ஹ**லோ குழந்தைகளே! தேவனுடைய கிருபையால் நீங்கள் அனைவரும் நலமாக உள்ளீர்கள் என்று நம்புகிறோம். எங்கள் கட்டுரைகளை ஒவ்வொரு மாதமும் படித்து வருகிறீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். இம்மாதம் இயேசு சொன்ன ஒரு உவமையை பார்ப்போம்.

மத்தேயு 25:1–13 தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு மணவாளனுக்கு எதிர் கொண்டு போகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளின் உவமையைக் காண்கிறோம். அவர்களில் ஐந்து பேர் புத்தியுள்ளவர்களும், ஐந்து பேர் புத்தியில்லாதவர்களுமா யிருந்தார்கள். புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக்கொண்டு போனார்கள், எண்ணெயையோ கூடக்கொண்டு போகவில்லை. புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவட்டிகளோடுங்கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டு போனார்கள். அதன் பிறகு என்ன நடந்தது என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

தயாராகாத கன்னிகளுக்கு கதவு மூடப்பட்டது.உங்களை அறியேன் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் மனவாளன். அன்பான குழந்தைகளே மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித் திருங்கள்.

தயாராக இருங்கள் ! நாம் சத்தியத்தை அறிய வேண்டும்; சத்தியம் நம்மை விடுதலையாக்கும். தேவனுடைய வசனமே சத்தியம். பைபிளைப் படித்து, ஆண்டவரைச் சந்திக்க தயாராக இருங்கள்.அவருடைய கற்பனைகளை நாம் கைக் கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோ மென்பதை அதினால் அறிவோம்(1 யோவான்2:3)

**God Bless**

**With love**
**Praisey Akka**

1. *பரலோக ராஜ்ஜியம் எதற்கு ஒப்பாயிருக்கிறது?*
2. *அங்கே எத்தனை கன்னிகைகள் இருந்தார்கள்?*
3. *புத்தியுள்ள கன்னிகள் செய்ததும், புத்தியில்லாத கன்னிகள் செய்யாததும் என்ன?*
4. *தேவனை சந்திக்க நாம் எவ்வாறு ஆயத்தமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்?*
5. *இந்த அதிகாரத்தில் உள்ள மற்ற உவமைகள் எவை?*

# அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது

Bro. பாண்டியன்

**தி**ருமறை ஆசான் வாசகருக்கு ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகள். கிறிஸ்தவ வாழ்க்கை நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்தது. மற்றவை பெரும்பாலும் காண் கிறவைகளை நம்பி வாழ்ந்து கொண்டிருக்க நாம் காணாததை நம்புகிறபடியால் அது வருகிறதற்கு பொறுமையோடே காத்திருக்கிறோம். அநேக உபத்திரவங்களின் மத்தியிலும் நாம் நம்பிக்கையோடே இருப்பதற்குக் காரணம் – ஒரு நாள் தேவ மகிமையை அடைவோம் என்கிற நம்பிக்கையே (ரோமர்5:2) கர்த்தர் தாவீதை அவனுடைய எல்லாச் சத்துருக்களின் கைக்கும், சவுலின் கைக்கும் நீங்கலாக்கி விடுவித்த போது, 'தம்மை நம்புகிற அனைவருக்கும் நம் தேவன் கேடகமாக (பாதுகாப்பாக) இருக்கிறார் என்று அவரைத் துதித்துப் பாடினான்.

ஒன்றை இங்கே கவனியுங்கள். எந்தப் பிரச்சனையும் இல்லத அமைதலான சூழ்நிலை ஏற்பட்டபோது தாவீதின் நம்பிக்கை தேவனை நாடியது. ஆனால், நம்மில் பலர் அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் ஊர் சுற்றிப் பார்க்கச் சுற்றுலா செல்லலாமா, தேவையற்ற விசேஷங்களில் ஈடுபடலாமா என யோசிக்கத் துவங்குகிறோம். சிலர் தங்கள் நம்பிக்கையை ஐசுவரியத்தின் மீது வைத்து தேவனையும், சபை கூடுதலையும், இரண்டாம் பட்சமாக மாற்றிப் போடுகிறோம். நீதி.11:28ல் தன் ஐசுவரியத்தை நம்புகிறவன் விழுந்து போவான் என்றும். நீதி. 28:25ல் கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான் என்றும் காண்கிறோம்.

இங்கே செழிப்பு என்பது வெறும் பொருளாதாரம் மாத்திரமல்ல, அது அவனுடைய குடும்ப மகிழ்ச்சியையும், சந்ததி பெருக்கத் தையும் தேவ தயவோடே மனுஷர் தயவும் அவனுக்கு உண்டா யிருப்பதையும் குறிக்கும். நம்முடைய, நம்பிக்கைக்கு சோதனையும் வரலாம் என்பது ஒரு கசப்பான உண்மை. நமக்கு ஏதாகிலும் சோதனைகள் (வியாதிகள், விபத்துகள்) நேரிடும்போது நம்முடைய நம்பிக்கை வீண் என்று மற்றவர் நம்மை பரியாசம் பண்ணக்கூடும் – உதாரணமாக, அசீரிய ராஜா சனகெரிப் யூத ராஜாவாகிய எசேக்கியாவின் ராஜ்ஜியத்தை முற்றுகையிட்டு ஜனங்களைப் பார்த்து நீங்கள் கர்த்தரை நம்புகிறது வீண் என்று கொக்கரித்தான் (2 ராஜா. 18:22) ஆனால், எசேக்கியா நம்பிக்கையுடன் தேவனை நோக்கி ஜெபித்த போது தீர்க்தரிசி மூலம் தேவன் சனகெரிப்பை யாரை நிந்தித்துத் தூஷித்தாய்? யாருக்கு விரோதமாய் உன் சத்தத்தை உயர்த்தினாய் என்று கடிந்து கொண்டு

அவனை சங்கரித்தார் என்று பார்க்கிறோம் (2 ராஜா 19:22).

எனக்கருமையானவர்களே, இன்றைக்கும் நம் விசுவாசத்தைக் குறை சொல்லும் மக்களின் மத்தியில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால், ஒரு வாக்குதத்தம் நமக்குண்டு. சங்.34:22ல் அவரை நம்புகிற ஒருவன் மேலும் குற்றஞ்சுமராது என்று காண்கிறோம். ஆகவே, நாம் நம்பிக்கையிலே சந்தோஷமாயிருக்க வேண்டும். இன்றைக்கு நாம் சுகம், பெலன் ஜீவனோடே இருப்பது தேவச்செயல் என்பதை மறந்து விடக்கூடாது. நாம் தேவனை நம்பியிருப்பவர்கள் என்பது நம் சிநேகிதர், உறவுகள், வேலைசெய்யும் இடம், படிக்கும் இடம் என நாம் வாழும் சமுதாயத்திற்கு தெரிந்து கொள்ளும்படி நாம் நடந்து கொள்ள வேண்டும். காரணம் என்னவெனில், தேவனுக்கு பயந்தவர்களுக்கும், மனுஷர் முன்பாக அவரை நம்புகிறவர்களுக்கும் தேவன் உண்டு பண்ணி வைத்திருக்கிற அவருடைய நன்மை எவ்வளவு. பெரிதாய் இருக்கிறது என்று சங் 31:19ல் தாவீது ஆச்சரியப்படுகிறார். ஒருவன் வாலிபத்தில் வேதத்தைச் சுமந்தால், அவனுடைய வயோதிகத்தில் வேதம் அவனைச் சுமக்கும் என்பார்கள்.

தேவன் மீது நம்பிக்கை வைப்பவர்கள், என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கிற சீயோன் பர்வதத்தைப் போல் இருப்பார்கள். நிந்தை, அவமானங்கள் அவர்களை பாதிக்காது. இவ்வுலகம் தெய்வங்களை விட மனுஷருக்கு அதிகமாக பயப்படுகிறது. காரணம் அவைகள் வாய் பேசமாட்டாத தெய்வங்கள். அவைகளை நம்புகிறவர்களும் அவைகளைப் போலவே இருக்கிறார்கள். ஆனால், கர்த்தரை நம்புகிறவனே!. உயர்ந்த அடைக்கலத்தில் வைக்கப்படுவான் என்பது நிச்சயம், சங்கீதக்காரன் பாடுகிறான், **என் ஆத்துமாவே தேவனையே நோக்கி அமர்ந்திரு, நான் நம்புகிறது அவராலே வரும்.** (சங் 62:5)

புதிய ஏற்பாடும் நாம் தேவன் மீதும் அவருடைய குமாரனாகிய இயேவின் மீதும் வைக்கும் நம்பிக்கையில் சந்தோஷமாக இருக்க போதிக்கின்றது. ஆபிரகாம் அநேக ஜாதிகளுக்குத் தான் தகப்பன் ஆவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாது இருந்தும் அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான்' என்கிறார் பவுல். (ரோமர் 4:18) நாமும் எல்லா சூழ்நிலையிலும் நம்பிக்கையாய் இருக்க வேண்டும். விசேஷமாக நாளையதின கவலைகளை விட்டு முதலாவது சபை கூடுதலையும் வேதவாசிப்பு, ஜெபம், சகோதர ஐக்கியம் இவைகளை நாம் தேடும் போது நம் தேவைகள் சந்திக்கப்படும் என்ற ஆண்டவரின் வாக்கில் நம்பிக்கை வைப்போம். மிகுந்த உபத்திரவத்திலும் உதாரத்துவமாய் கொடுத்த மக்கதோனிய சபையாரைப் போல இருப்போம்.

உலகத்தாரைப் போல தீமைக்கு தீமை செய்யாமல் – நன்மை செய்யப் பழகுவோம். ஏனெனில் நாம் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி தேவனால் –சபைக்குள் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்கிறார் பேதுரு அப்போஸ்தலன் [1பேதுரு 3:9]. நாம் இம்மைக் காக மாத்திரமல்ல மறுமைக்காகவும் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை யாய் இருக்கிறோம். சரீர முயற்சி அல்ல, தேவ பக்தியே இம்மைக்கும் மறுமைக்கும் பிரயோஜனமுள்ளது என்பதை உணர்ந்து நம்பிக்கையாய் இருப்போம். தேவக் கிருபை நம் அனைவரோடுங் கூட இருப்பதாக ஆமென்.

✝

## ...முடியாது...

★ *போராட்டமில்லா வாழ்வில் மாற்றங்களை காண முடியாது... யோபு 14:14*

★ *உபத்திரவமில்லா வாழ்வில் எவரும் உருவாக முடியாது... ஏசா 48:10*

★ *சோதனையற்ற வாழ்வில் எவரும் சாதிக்க முடியாது... யாக் 1: 12*

★ *சிட்சைக்கு நில்லாத எவரும் தேவனுக்கு பிள்ளையாக முடியாது... எபி 12:5*

★ *பாடுகளின் வழி செல்லாமல் பரமதேசம் காண முடியாது... 1பேதுரு 4:13*

# கிறிஸ்து என்னும் மார்க்கம் பாடங்கள்
## நசரேனாகிய இயேசு
### சகோ. ஜே. ஆபகூக் ஜேம்ஸ் ராஜகுமார்

முன்னுரை :

1. ஒரு பெரிய இராஜா தூரதேசத்திற்கு பயணம் செய்தபோது, அங்கே ஒரு பெண்ணைத் திருமணம் செய்து அவருக்கு ஒரு மகன் பிறந்தான்.

2. விரோதிகள் அந்த தேசத்தின்மேல் போர்தொடுத்தார்கள். இராஜா போரில் சாகும் அளவிற்கு காயப்பட்டான். அப்பொழுது இராஜா தமது உறவினனை அழைத்து தம் மகனை ஒப்புக்கொடுத்து, மகனை வளர்த்து தேவையான நேரத்தில் அவனை இராஜாவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டான்.

3. இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை இதைவிட வித்தியாசமானது என்றாலும் சில முறைகளில் அதைப்போல இருக்கிறது.

4. யெகோவாதான் இஸ்ரவேலின் மெய்யான இராஜா. அனால் கி.மு.4 ல் ரோமர்கள் இஸ்ரவேல் நாட்டை ஆண்டு கொண்டார்கள், மத். 21 : 33 – 46.

5. தேவன், கிறிஸ்துவைத் தம்முடைய மகனாக இந்த உலகத்தில் அனுப்பினார். தேவன் இஸ்ரவேலுக்குத் தந்த தேசத்திற்கு இயேசுவானவர் வந்தபோது அந்த மக்கள் அவரை அறியவில்லை, யோவா.1:10, 11. ‘அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

6. தேவன் எல்லாவற்றையும் சிருஷ்டித்து, நியாயப் பிரமாணத்தை மோசேயின்மூலம் கொடுத்து, கானான் தேசத்தைத் தந்தார் என்கிற வேத சரித்திரத்தை அவர்கள் அறிந்தும், மேசியாவை அறியவில்லை.

7. இந்த அறியாமையைக் குறித்து லூக். 13 : 24 – 30 ல் இயேசுவானவர் அவர்களை எச்சரித்தார். ‘இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள், அநேகர் உட்பிரவேசிக்க வகைதேடினாலும் அவர்களாலே

கூடாமற்போகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். வீட்டெஜமான் எழுந்து, கதவைப் பூட்டின பின்பு, நீங்கள் வெளியே நின்று: ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறக்க வேண்டு மென்று சொல்லிக் கதவைத் தட்டும்போது, அவர் பிரதியுத்தரமாக: நீங்கள் எவ்விடத்தாரோ, உங்களை அறியேன் என்று உங்களுக்குச் சொல்லுவார். அப்பொழுது நீங்கள்: உம்முடைய சமுகத்தில் போஜனபானம் பண்ணினோமே, நீர் எங்கள் வீதிகளில் போதகம் பண்ணினீரே என்று சொல்லுவீர்கள். ஆனாலும் அவர்: நீங்கள் எவ்விடத்தாரோ, உங்களை அறியேன், அக்கிரமக்காரராகிய நீங்களெல்லாரும் என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று சொல்லுவார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்...‘ என்றார்.

8. ஏன் அதிகமான யூதர்கள் இயேசுவானவரை ஏற்றுக் கொள்ளவில்லை? ஏனென்றால் அவர் தம்மைக்குறித்து என்ன போதித்தாரோ அதையே அவர்கள் நம்பவில்லை!

I. இயேசுவானவர் தம்மைக்குறித்து என்ன சொன்னார்?

அ. நானே நல்ல மேய்ப்பன் ...ஆனாலும், நான் உங்களுக்குச் சொன்னபடியே, நீங்கள் என் மந்தையின் ஆடுகளாயிராத படியினால் விசுவாசியாமலிருக்கிறீர்கள். என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது‘ என்றார். யோவா. 10:14, 26 – 27.

ஆ. யூதர்களின் தவறை அப்போஸ்தலனாகிய பவுலும் வெளிப் படுத்துகிறார். **ஆகையால், இதுதற்கொண்டு, நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்; நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்.** 2கொரி. 5:16.

1. இந்த வசனத்திற்காக நாம் இயேசுவின் சிலை, படம், காலண்டர் போன்றவை பயன்படுத்தக் கூடாது.

2. யூதர்கள் இயேசுவினுடைய பூமிக்குரிய முகத்தைக் கண்டிருந்தாலும் அவரைக் கொன்றுவிட்டார்கள். இயேசுவானவரின் பூமிக்குரிய முகம் அல்லது அடையாளம் இப்பொழுது யாருக்கும் தெரியாது.

3. இன்னும் அநேகருக்கு வாழ்க்கையைப் பற்றி தெரிந்திருந்தாலும் அவர்கள் இயேசுவின் உண்மையான கிறிஸ்தவர்கள் ஆகவில்லை.

4. ஏனென்றால் அவருடைய மனது, இருதயம் மற்றும் அவருடைய மெய்யான ஆள்தத்துவம் அவர்களுக்குத் தெரியவில்லை.

II. தேவன் எப்படி பூமியில் இயேசுவானவரோடு இணைந்து ஊழியம் செய்தார் என்பது இயேசுவினுடைய உள்ளான தன்மையை வெளிப்படுத்துகிறது.

அ உதாரணமாக, ஆதி. 3: 15 ல் மேசியாவின் முதல் வாக்குத் தத்தத்தைத் தருகிறது: அது ஒரு பெண்ணின் வித்து சாத்தானைக் கொன்றுவிடுவார் என்று கூறுகிறது. **உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்.**

1. லூக். 1 : 35 அதை விவரிக்கிறது: தேவதூதன் மரியாளுக்கு **பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப் படும்** என்றான்.
2. தெய்வீகமானவர் எப்படி ஒரு மனிதனாக மாறமுடியும் என்பதை பிலி. 2 : 5–7 வெளிப்படுத்துகிறது. **கிறிஸ்து ...தேவனுடைய ரூபமாயிருந்தும் தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்**
3. தேவன் மனிதனைப் படைக்கும்போது, மனிதனுடைய ஆவியை தம் சொந்த ஆவிக்குரிய சாயலில் உருவாக்கினார் என்பதற்காக கிறிஸ்துவால் மனிதனாகப் பிறக்கமுடியும். ஆகவே, மனிதன் விலங்காக, ஊரும்பிராணியாக, பறவையாக இன்னொரு ஜென்மத்தில் பிறந்திருப்பான் என்பது கட்டுக்கதை ஆகும்.
4. இயேசுவானவர் தம்மிடத்திலிருந்த வல்லமை, ரூபம் போன்றவை வெறுமையாக்கி, ஒரு குழந்தையாக தாழ்மையாக மாறினார். பரிசுத்த ஆவியானவர் மரியாளைப் பெலப்படுத்தினார்; தேவன் கிறிஸ்துவின் ஆவியை வயிற்றிலிருந்த சிசுவினிடத்திலே சேர்த்தார். எபி. 10 : 5.
5. அநேகர் இயேசுவை ஒரு அவதாரம் என்றாலும், அவர்களால் தேவனும், மனுஷனும் எப்படி ஒன்றாயிருக்க முடியும் என்பதை விவரிக்க முடியாது.

ஆ இயேசுவுக்கு எப்படிப்பட்ட இருதயம் உண்டு என்பதை அவருடைய சுவிசேஷமாகிய மரணம் அடக்கம் உயிர்த்தெழுதல் வெளிப்படுத்துகிறது.

1. அவர் சிலுவையில் மரித்த விதத்தைப் பார்த்தபோது, ஒரு நூற்றுக்கதிபதி: **... மெய்யாகவே இந்த மனுஷன் தேவனுடைய குமாரன் என்றான்.** மாற். 15: 39.

2. அவருடைய கல்லறையை ரோம ராணுவம் காவல் காத்தாலும், அது மூன்றாம் நாளில் (ஞாயிற்றுகிழமையில்) காலியாயிற்று, மத். 28 : 2 – 4, 11 – 15.

3. சில பெண்கள் கல்லறையைப் பார்க்கச் சென்றபோது, தேவதூதர்கள்: **அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார்** என்றார்கள். லூக்.24:6.

4. சீஷர்கள், உயிர்த்தெழுந்த இயேசுவைப் பார்த்து, தொட்டு, பேசி அவர் உயிரோடு இருக்கிறார் என்பதை அறிந்தார்கள், அப். 1 : 3; 1யோவா. 1 : 1. அதன்பின்பு அவர் அவர்களுடைய கண்களுக்கு முன்பாக வானத்தில் ஏறிப்போனார், ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது, அப். 1:9–11.

5. வேறு எந்த மதத்தின் தலைவரும் இப்படிப்பட்ட வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்ந்ததில்லை. அனைவரும் மரித்து மண்ணிற்குள் இருக்கிறார்கள். கிறிஸ்து நித்தியமான உயிர்த்தெழுதல் அடைந்து பரலோகம் சென்றதால் கிறிஸ்து அல்லது கிறிஸ்தவம் ஒரு மதமல்ல அவர் ஒரு மார்க்கம்.

இ. ரோம. 1:4 – 5 ன்படி கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதல் அவருடைய தெய்வீகத்தை நிரூபிக்கிறது.

1). இயேசு, தம் பரமேறிச் செல்லுதலையும், பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தையும் முன்கூறினார். **அவர் (ஆவியானவர்) வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக் குறித்தும் ...உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக்குறித்தும்** ... (உலகத்தைக்) ... கண்டித்து உணர்த்துவார். யோவா. 16 : 8–11.

2. ஆகையால் மேற்கண்ட வசனங்களின்படி இயேசு கிறிஸ்துவுக்கு பரலோகம் செல்லும் அளவிற்கு நீதியுண்டு. இதை அவர் நியாயப்பிரமாணத்தை முழுவதும் நிறைவேற்றினதினாலே அதை அடைந்தார், ரோம. 10 : 5.

ஈ. யூதர்களுக்கு பாவம், நீதியைக்குறித்து ஆவியானவர் எவ்வாறு கண்டித்து உணர்த்தினார்?

1. அப். 2 : 30–34 ல் **அவன் (தாவீது ராஜா) தீர்க்கதரிசியாயிருந்து: உன் சிங்காசனத்தில் வீற்றிருக்க மாம்சத்தின்படி உன் சந்ததியிலே கிறிஸ்துவை எழும்பப்பண்ணுவேன் என்று தேவன் தனக்குச்**

சத்தியம் பண்ணினதை அறிந்தபடியால், அவன் கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்திலே விடப்படுவதில்லையென்றும், அவருடைய மாம்சம் அழிவைக் காண்பதில்லையென்றும் முன்னறிந்து, அவர் உயிர்த்தெழுதலைக்குறித்து இப்படிச் சொன்னான். அவர் தேவனுடைய வலதுகரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத் தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்.'

2]. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கும், பரமேறிச் செல்லுதலுக்கும் சொன்ன அப்போஸ்தலருடைய சாட்சியை தேவனுடைய வார்த்தையாக ஏற்றுக்கொண்ட யூதர்கள் கீழ்ப்படிந்து கிறிஸ்தவர்கள் ஆனார்கள். இயேசு உயிரோடு வந்துவிட்டார் என்பது மற்ற யூதர்களுக்கு கண்டனமாயிருந்தது.

உ. கீழ்படிந்த யூதர்கள் நாசரேனாகிய இயேசுவைகுறித்தும், அவருடைய பரிபூரணமான நீதி, வல்லமை, தெய்வீகம், அவர் தேவனுடைய சித்தத்தை மாத்திரம் எப்போதும் செய்தார் போன்றவற்றைக் கற்றுக்கொண்டார்கள்.

1. தேவன் தம்முடைய குமாரன் என்பதற்காக அல்ல, இயேசுவின் பரிபூரணமான நீதியின் நிமித்தமாக அவரை எழுப்பினார். ஏனென்றால், விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்று கூறப்படுகிறது.
2. யூதர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்ததினால் பெரிய பாவம் செய்தார்கள்; ஆகவே தேவனுடைய கோபாக்கினை கூடிய விரைவில் யூதேயாவை அழித்துவிட்டது. நாம் கீழ்ப்படியவில்லையானால் அவர்களைபோல பாவம் செய்து தேவ கோபாக்கினையில் இருப்போம்.
3. இயேசுவானவர், பிதாவுக்குக் கீழ்ப்படிந்ததினால் பரலோகம் சென்று, ராஜ்யம் அதிகாரமும் பெற்றுக்கொண்டார், மத். 28 : 18; தானி. 7 : 13 – 14. நாமும் கீழ்ப்படிந்தால் நமக்கும் ராஜ்யத்தில் இடங்கொடுப்பார்.
4. ஏனென்றால், இயேசுவின் நீதியினாலும், பலியினாலும் நம்முடைய எல்லா பாவங்களையும் மன்னிக்க முடியும். நம்மை நீதிமான்களாக்க முடியும், எபி. 2 : 18; 4:15,16. நாம் அந்த அளவிற்கு நாசரேனாகிய இயேசுவை விசுவாசிக்கிறோமா?

**முடிவுரை :**

1. இயேசுவானவர் எப்படி நம்முடைய பாவங்களை மன்னிக்கிறார் என்றும் சோதனையை எதிர்த்து பாவத்தைத் தோற்கடிக்க அவர் எப்படி நமக்கு உதவி செய்கிறார் என்றும் நாம் அதிகமாகக் கற்றுக்கொள்ளவேண்டும்.

2. இயேசுவைப்போல நாம் நீதிமான்களாக வேண்டுமானால் நாமும் அவரைப்போல மாறவேண்டும், லூக். 6: 40.

3. அவராலே வரும் ஆசீர்வாதங்களுக்கு அவருடைய நீதி கதவாயிருக்கிறது. அவர் தமது நீதியினால் பாவத்தையும் மரணத்தையும் சாத்தானையும் தோற்கடித்தார். அதினாலே அவருடைய ஐக்கியத்தில் நித்தியஜீவனை நமக்குப் பகிர்ந்துகொள்ளுகிறார்.

4. பிதாவையும் கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன், யோவா. 17 : 3. கிறிஸ்துவை நாம் அறிவதால் அவரை நேசித்து அவருடைய எல்லா நீதிக்கும் கீழ்ப்படிவோம். யோவா. 14:23 – 24.

5. இயேசுவின் ஆசீர்வாதங்களில் பங்காளிகளாய் இருக்க விரும்புகிறீர்களா? விரும்பினால் அவருடைய மரணத்திற் குள்ளாக்கும் ஞானஸ்நானம் பெற்று, சீஷனாக வாழ்ந்து, தேவனுடைய சித்தம் செய்தால், அவர் வரும்போது நம்மை அவரோடு பரலோகம் கொண்டு செல்வார். ஆமென்.

✝

## *நாளும் நடப்பும்*

1. புதிய கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை ஏப்ரல் மாதம் தொடக்கம்.

2. இந்தியாவில் உயரமான அம்பேத்கர் சிலை திறப்பு

3. துருக்கியில் மீண்டும் ஏற்பட்டுள்ள நிலநடுக்கம், அச்சத்தில் மக்கள்.

4. இந்தியாவில் மீண்டும் கொரோனாவின் தாக்கம் அதிகரித்து வருகிறது

5. ஐ.பி.எல் போட்டி 2023 – டெண்டுல்கரின் மகன் அர்ஜுன் டெண்டுல்கர் முதல் முறையாக அறிமுகமாகியுள்ளார்.

# தேவன் நமக்குக் கொடுத்த வாழ்க்கையில்...

K.M. பிலிப். பவானி

அன்பான நேயர்களே! உங்கள் யாவருக்கும் சதாகாலமும் உயிரோடிருக்கிற இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். பிதாவாகிய தேவன் இப்பூமியில் நாம் வாழும்படி கொடுத்த வாழ்க்கையில் நான்கு வித வாழ்க்கையை நாம் சந்திக்க வேண்டும். அவை,1. குடும்ப வாழ்க்கை 2. தனிப்பட்ட வாழ்க்கை 3. பக்திக் குரிய வாழ்க்கை 4. சமுதாய வாழ்க்கை. இந்நான்கு வாழ்க்கையும் தான் 5–வது வாழ்க்கையான நித்திய வாழ்க்கையை நிர்ணயிக்கும். இந்நான்கிலும் நாம் நடைமுறைப்படுத்தும் பக்தி வாழ்க்கையே பரலோக நித்திய வாழ்வுக்குள் நம்மை உட்படுத்தும். மேற்கண்ட நான்கு வாழ்க்கையையும் நம் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்த்து 5–வது வாழ்க்கையை உறுதிப்படுத்திக் கொள்வோம்.

**முதலாவது குடும்ப வாழ்க்கை:**

இதுவே மற்ற நான்கு வாழ்க்கைக்கும் அஸ்திபாரமாய், அடிப்படையாய் உள்ளது. ஆதியில் தேவன் ஆணையும், பெண்ணையும் படைத்ததோடு அவர்களை கணவன் மனைவியாக இணைத்து, முதல் குடும்பத்தை உருவாக்கினார். ஆம் குடும்பத்தை திட்டமிட்டு உருவாக்கியவரும், செழிப்பான வாழ்க்கைக்கு வழி வகுத்தவரும் சர்வவல்ல தேவனேயாகும். இந்த விசுவாசம் இருவருக்குள்ளும் இருக்குமானால், கணவன் தன் மனைவியைக் குறித்து, ' **இவள் தேவன் எனக்குக் கொடுத்த ஏற்ற துணை என்றும்,** மனைவி தன் கணவன் குறித்து, **நான் இவருக்கு ஏற்ற துணையா யிருக்க தேவன் எனக்குக் கொடுத்த கணவர்** என்றும் தேவனுக்குக் கொடுக்க வேண்டிய கணத்தை தவறாமல் கொடுப்பார்கள் [ஆதி. 2:18]. இந்த குடும்பத்தில், ' உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சைக் கொடியைப் போலிருப்பாள். உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவ மரக்கன்றுகளைப் போல இருப்பார்கள். உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய். உனக்கு பாக்யமும் நன்மையும் உண்டாயிருக்கும் ' [128:3,2].

இதற்கு ஆசீர்வாதம் குடும்பத்தில் என்றென்றும் நிறைவா யிருக்க, கணவன், மனைவி இருவருக்குமாக ஞானமுள்ள தேவன்

கொடுத்த ஒரே ஒரு ஆலோசனை, அவர்கள் ஒரே மாம்சமா யிருப்பார்கள் என்பதேயாகும் [ஆதி. 2:24]. **இது எல்லாக் காலத்து க்கும் பொருந்தும் ஆலோசனையாகும். இது சாத்தியமா?** ஆம். இருவரும் தேவபக்தியுள்ளவர்களாயிருந்து அவருக்குச் சித்த மானதை செய்வதில் உறுதியாய் இருந்தால் இது சாத்தியமே [யோவான் 9:31]. இருவரும் திருமணத்தில் இணைக்கப்படும் வரை நான், எனக்கு, என்னுடையது என்று வாழ்ந்த வாழ்க்கை; இப்பொழுது நாம், நமக்கு, நம்முடையது என்று வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்கும். இயேசு சொல்கிறார், 'என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவானதுமாயிருக்கிறது [மத். 11:30]. ஆம் தேவன், மனித இனத்தால் செய்ய முடியாததை கட்டளையாக கொடுக்கவேமாட்டார். படைப்பில் மனித இனத்தின் ஒரே சரீரத்தில் இரண்டு கண்கள், இரண்டு காதுகள், இரண்டு கைகள், இரண்டு கால்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஒரே மனம் தான் படைக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒரே மனம் இருப்பதால் தான் சரீரத்தில் உள்ள எல்லா உறுப்புகளும் இணைந்து செயல்படுகிறது. வாழ்க்கை வாழ்கிறது. இவ்வாறு தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து தேவ வார்த்தையைக் கனப்படுத்து வோமானால், தேவன் நம் குடும்ப வாழ்க்கையை சபைக்கு முன்பாக, சதாயத்திற்கு முன்பாகக் குற்றமற்றதாய், குறை வற்றதாய், நிறுத்தி கனப்படுத்துவார். பிள்ளைகளின் பிள்ளை களையும் இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தாலும் உங்கள் குடும்ப வாழ்க்கையை திருப்தியாக்குவார்.

**2-வது தனிப்பட்ட வாழ்க்கை:**

உண்மையில் இது தனிப்பட்ட வாழ்க்கை அல்ல. ஏனெனில், நம்மோடு பிதாவாகிய தேவனும், குமாரனாகிய கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரும் இருக்கிறார்கள் என்பதே நம் விசுவாசம் [1 பேதுரு 1:2]. இதை பக்திக்குரிய வாழ்க்கை என்று சொல்லலாம். மெய்யாகவே நாம், குமாரனால் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி யினர் [1 பேதுரு 2:9]. **அதற்கான காரணங்களில் ஒன்று, பக்தியுள்ளவனை கர்த்தர் நமக்காகத் தெரிந்து கொண்டார் என்று அறியுங்கள்**[சங். 4:3]. இந்த தேவபக்தி எப்பொழுதும் தொடர வேண்டும். ஆனால், இன்று அநேகருடைய தனிப்பட்ட பக்தி வாழ்க்கையில் தோல்வியுற்றவர்கள் என்பதை அறியா மலிருப்பது தான் பரிதாபம். உண்மையான பக்தி என்பது, **என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக்**

**கொள்கிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான்,** (அதாவது என்னிடத்தில் பக்தியாயிருக்கிறான்) என்று இயேசுவே கூறியுள்ளார் (யோவான் 14:21). அப்படியென்றால், தனிப்பட்ட வாழ்க்கையில் எபே. 5:25ன் படி மனைவியில் அன்பு கூராதவனின் பக்தியும்; எபே. 5:22ன் படி கணவனுக்குக் கீழ்ப்படியாத மனைவியின் பக்தியும்; எபே. 6:1ன் படி பெற்றோருக்கு கர்த்தருக்குள் கீழ்ப்படியாத பிள்ளைகளின் பக்தியும்; இயேசுவின் இயேசுவின் மூலம், பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு அப்போஸ்தலர்களால் உபதேசிக்கப்பட்டு (அப். 2:42) எழுதப்பட்டுள்ள சுயாதீனப் பிரமாணமாகிய பூரண பிரமாணத்தை உற்றுப்பார்த்து (யாக் 1:25) அதன்படி ஆராதிக்கிறவர்களின் பக்தியும் வீண் என்பதை தெளிவாய்ப் புரிந்துகொள்ளுங்கள்.

அதேசமயம் தனிப்பட்ட நபர்களின் உண்மையான பக்தி வாழ்க்கை அநேக சாதனைகளை சாதித்திருக்கிறது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். பக்தியுள்ள சவுலாகிய பவுலை தேவன் தெரிந்து கொண்டார். அவரைக் குறித்து வேதம் கொடுக்கும் சாட்சியைக் கவனியுங்கள். சவுல் (பவுல்) தமஸ்குவிலுள்ள சீஷர்களுடனே சில நாள் தங்கியிருந்து, **தாமதமின்றி** கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று பிரசங்கி தான் (அப். 9:20). தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட நாம் இதுவரை எத்தனை பேருக்கு சுவிசேஷத்தை பிரசங்கித்திருக்கிறோம் ? இன்னும் ஏன் தாமதம்? ஒரு தனிப்பட்ட பெண் லீதியாள் பவுல் மூலம் சுவிசேஷத்தைக் கேட்டு பக்தியுள்ளவளாகி தன் முழு குடும்பத்தையும் இரட்சிப்புக்குள்ளாக வழி நடத்தினாள் (அப். 16:14,15). கொர்நெல்யுவின் தனிப்பட்ட பக்தி வாழ்க்கையின் பிரதிபலிப்பால் (அப். 10:2) இப்பக்திமானின் அழைப்பை ஏற்று வந்த ஒரு பெருங் கூட்டம், காத்திருந்து பேதுருவின் மூலம் சுவிசேஷத்தைக் கேட்டு மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டார்கள் (அப்.10). கொர்நெலியுவின் தேவ பக்தியுள்ள வாழ்க்கை அன்றைய நாளில் பரலோகத்தில் எவ்வளவு பெரிய சந்தோஷத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதை தயவு செய்து சிந்திப்போம். நம் தனிப்பட்ட பக்தி வாழ்க்கை அநேகருக்கு வழிகாட்டுதலாய் இருக்கட்டும். நம் பக்தி வாழ்க்கை உலகத்திற்கு ஒளி வீசட்டும்.

**3-வது சபைக்கான வாழ்க்கை:**

அன்பானவர்களே! சபை கூடிவருகிற நாம் சாதாரணமானவர்கள் அல்ல. கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்


பட்டவர்களாயுமிருக் கிற தேவனுடைய சபையைச் சார்ந்தவர்கள் [1கொரி. 1:2]. நாம் அங்கம் வகிக்கும் சபை சமாதானம் பெற்று பக்தி விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும் பரிசுத்த ஆவியின் பலத்தோடும் நடந்து பெருகவேண்டும் [அப். 9:31]. சபையில் இதற்கான உங்கள் பங்கு என்ன? இத்தகு சபை வாழ்க்கையில் உங்கள் உழைப்பு என்ன? குறித்த நேரத்தில் சபை கூடி வந்திருக்கி றோமா? வருடத்தின் 52- வாரத்தின் முதல் நாளிலும் சபை கூடி வந்திருக்கிறோமா? புதிய நபர்களை - நண்பர்கள், உறவினர்கள், உடன் பணியாற்றுபவர்களை ஆராதனைக்கு அழைத்து வர திட்டமிட்டு செயல்படுத்தியிருக்கிறோமா? சபை நடைமுறை காரியங்களில் நம்மை ஈடுபடுத்தியுள்ளோமா? சபை விசுவாசி களோடு மாயமற்ற அன்பு செலுத்தி ஐக்கியத்தை பலப்படுத்தி இருக்கிறோமா? ஊழியரை எல்லா நிலையிலும் கனப்படுத்து கிறோமா? இக்கேள்விகளை உங்களுக்குள்ளாகக் கேட்டு விடை கண்டுபிடியுங்கள். அது உங்களுக்கு திருப்தியாயிருக்க வாழ்த்து கிறேன். சபை கூடி வர ஆயத்தப் படுத்துங்கள்; ஜெபியுங்கள்.


**4-வது சமுதாய வாழ்க்கை:**

தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் இவ்வுலக மக்களோடு தான் வாழ்ந்தாக வேண்டும். இவ்வுலகத்திலுள்ள... இவர்களோடு எவ்வளவும் கலந்திருக்கக் கூடாது என்று நான் எழுதவில்லை அப்படியானால் நீங்கள் உலகத்தை விட்டு நீங்கிப் போக வேண்டியதாயிருக்கும் [1 கொரி. 5:10] என்ற உண்மையை பவுல் தெளிவு படுத்திவிட்டார். அதே சமயத்தில் இரட்சிக்கப்பட்ட நம் வாழ்க்கை நடைறை அநேகரை இரட்சிப்புக்குள் இழுத்து வரவேண்டும். ஈசாக்கு தன் வாழ்க்கையில் யாரையும் பகைத்துக் கொள்ளவில்லை. பகைவர்களை சகித்துக் கொண்டான், விட்டுக் கொடுத்தான். ஈசாக்கை குறித்து பகைவர்கள், ‘ நிச்சயமாய் கர்த்தர் உம்மோடு கூட இருக்கிறார் என்று கண்டோம் ‘ என்று சாட்சி சொன்னார்கள் [ஆதி. 26:28]. ஆம் ‘ தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும். இதே சமுதாயத்தோடு பரிசுத்தமாய் வாழ்ந்து காட்டுவோம். கிறிஸ்துவின் வருகையில் நம்மைப் பார்த்து ‘வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே... ராஜ்ஜியத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்‘ என்று தன்னோடு பரலோக வாழ்க்கைக்குள் பிரவேசிக்கச் செய்வார். தேவன் கொடுத்த இவ்வாழ்க்கையில் வெற்றி பெற வாழ்த்துகிறேன். ஆமென்!!!

✝


## 12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும். தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

















# World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Tuesday 6:30 - 7:00 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026




"Registered" with RNI No: TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2021 - 2023
Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023
Date Of Publication: 17/18 th of Every Month
Date Of Posting: 20/21 of Every Month
Place Of Posting: Erode HPO

**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்


# எங்களது இதர வெளியீடுகள்


**தபால் செலவிற்கு
பணம் அனுப்பி
இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**






















## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில்
## ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு
இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

To:

## திருமறை தியானம்

**நம்பிக்கை** தொலைக்காட்சியில்

| | |
|---|---|
| செவ்வாய் | காலை 6:30 – 7:00 மணி |
| வெள்ளி | காலை 7:30 – 8:00 மணி |

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.